
www.tamilarangam.net

# சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியாவின் அணுகுமுறையும்

# அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையும்

**"... கிழக்குமாகாணத்தில் ஏற்பட்டுவருகின்ற மாற்றங்களைப் புரிந்துகொள்ளாமல் எதிர்காலத்தில் இலங்கை தொடர்பான இந்திய இராணுவ உபாயம் எத்தகைய மாற்றங்களுக்கு உள்ளாகக் கூடும் என்பதைப் புரிந்துகொள்வது சாத்தியமில்லை..."**




கொழும்பில் விடுதலைப்புலிகள்- அரசு இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளன. இந்தியப்படை வெளியேற்றந் தொடர்பாக இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையில் இடம்பெற்றுவருகின்ற இராஜதந்திர யுத்தம், ஜே.வி.பி.யினரது இந்திய பகிஸ்கரிப்பு இயக்கம் என்பவை வகுப்புவாதமற்ற பாதையில் வளர்ச்சியடையுமானல், சிங்களமக்கள் மத்தியில் பேச்சுவார்த்தைக்கு சாதகமான சூழல் வலுப்படும். எனினும் இதுபற்றிய நிச்சயமின்மை உள்ளது. சிங்களமக்களது இந்திய விரோத உணர்வு இலங்கையில் கௌரவ குடியுரிமை பெற்றுவாழும் இந்திய வம்சாவழியினர்க்கு எதிராக திரும்பியுள்ளதே இந்த நிச்சயமின்மைக்குக் காரணமாகும். இவர்களுள் பலர் இந்திய வர்த்தகர்களும் தொழிலதிபர்களுமாவர். இவர்களுக்கெதிராக ஆரம்பிக்கும் இயக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவிர்க்கவியலாத வகையில் மலையகத் தமிழர்களுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் எதிரான வகுப்புவாத இயக்கமாக மாறிவிடுகின்ற ஆபத்துள்ளது. சிங்களமக்களிடையேயும் இலங்கை இராணுவத்தினரிடையேயும் மத்தியில் கொழுந்துவிட்டெரியும் இந்திய விரோத உணர்வை வகுப்புவாதமற்ற எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்கக்கூடிய இலங்கையரசின் வல்லமையிலேயே கொழும்பு பேச்சுவார்த்தைகளின் வெற்றி தங்கியுள்ளது.

கடந்த வாரங்களில் கொழும்பில் காணப்பட்ட சுவரொட்டிகள் தமிழர்கள் மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு வெளியே விடுதலைப்புலிகள் - அரசு பேச்சுவார்த்தைகள் இடம்பெறக்கூடாது என்பதே இச்சுவரொட்டி வாசகங்கள். இப்போது கிடைத்துள்ளதைவிட அதிக உரிமைகளை தமிழ்பேசும் மக்களுக்கு வழங்காதே என்பதே இந்தக் கோரிக்கையின் அர்த்தமாகும். இந்த சுவரொட்டி இயக்கத்தின் பின்னணியில் ரஞ்சன் விஜேரத்தின போன்ற அமைச்சர்கள் சிலர் இருப்பதாக கூறப்படுகின்றது. இந்த விடயத்தில் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும் முன்னைநாள் சிங்களத் தலைவர்களின் பாதையில் பிரேமதாச செல்லப்போகின்றாரா அல்லது பேச்சுவார்த்தைக்கு குந்தகம் விளைவிக்கும் அமைச்சர்கள்மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றாரா என்பது இனித்தான் தெரியவரும்.

இவற்றைவிட இப்பேச்சுவார்த்தைகள் எதிர்நோக்கும் பெரிய சவால்கள் யாவும் கிழக்கு மாகாணம் தொடர்பானதாகும். வடமாகாணத்தைப் பொறுத்து விடுதலைப்புலிகளின் கோரிக்கைகள் பலவற்றுக்கு இலங்கையரசு விட்டுக்கொடுக்கலாம்.

இந்திய இராணுவமா இலங்கை இராணுவமா உங்களது முதல் எதிரி என்று கேட்கப்பட்டால் பெரும்பான்மையான வடமாகாணத்து மக்கள் குறிப்பாக



திரு.பாலசிங்கம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் இந்திய இராணுவம் என்ற பதிலை இலகுவாகக் கூறிவிடுவார்கள். ஆனால் கிழக்கு மாகாணத்தில் நிலைமை அதுவல்ல. சிங்கள இராணுவ அட்டூழியங்கள் நிலப்பறிப்புடனும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுடனும் சம்பந்தப்பட்டுள்ள கிழக்குமாகாணத்தில் மீண்டும் இலங்கை இராணுவத்தினரின் கை ஓங்கும் நிலைமையை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்பது தெளிவாகியுள்ளது.

கிழக்குமாகாண நிலைமைகளை கையாளுவதில் இந்திய இராணுவமும் அதன் ஆதரவு அமைப்புகளும் நீண்டகால கண்ணோட்டத்துடன் செயற்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். 1988ஆம் ஆண்டின் ஆரம்பங்களிலேயே கிழக்குமாகாணத்தில் திருமலை நகரிலும், வெலிஓயா தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் சிங்கள மக்களை குடியெழுப்புவதிலும் கட்டுப்படுத்துவதிலும் இந்திய இராணுவமும் அதன் ஆதரவு அமைப்புகளும் ஈடுபட்டன. திருமலை நகரில் இந்த முயற்சி குறிப்பிடத்தக்களவு வெற்றி பெற்றுள்ளது. அண்மையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை இராணுவ அதிகாரிகள், திருமலை நகரில் இருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள அகதிகளை அங்கு மீளக் குடியேற்றுவதற்கு வடக்குக் கிழக்கு மாகாண அரசு தடையாக உள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளனர் (ISLAND MAY 18). சிறீமாவோபுரத்தை இந்துபுனிதப் பிரதேசம் என்ற போர்வையில் சுவீகரிப்பதற்கு மாகாண அரசு முயற்சி செய்வதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் கிழக்குமாகாண மக்களது அபிப்பிராயத்தில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை செலுத்துகின்றது.

இந்தியப் படைகளும் அதன்



திரு.பிரேமதாச

ஆதரவாளர்களும் ஏன் இதுவரை வெலிஓயாவில் தலையிடவில்லை என்ற நியாயமான கேள்வி இங்கு எழுகின்றது. வடக்கு கிழக்கு மாகாணத்தை இணைக்கும் கழுத்துப் பிரதேசம் இந்த வெலிஓயா. இப்பகுதி சிங்களக் குடியேற்றத்தால் துண்டிக்கப்பட்டிருப்பது கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்தும்.

இதைவிட வெலிஓயா இலங்கைத் தமிழர்களது தலைமை வில்லனாகவும் சித்தரிக்கப்பட்டுவந்துள்ளது. இந்தத் தலைமை வில்லனை அடித்து விழுத்துகிறவர்களுக்கு கிழக்கு மசாகாண மக்கள் விசிலடித்து கைதட்டி ஆதரவு வழங்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை. வடமாகாணத்துப் பொது மக்கள் அபிப்பிராயங்களிலும் இது பாதிப்பை ஏற்படுத்தும். விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக, வெலிஓயாவின் முக்கியத்துவம் குறைந்துபோய்விட்ட இன்றைய நிலையில் வெலிஓயாவில் இந்திய இராணுவமும் மாகாண சபையின் தொண்டர்படையும் தலையிடலாம் என்று ஊகிக்க முடிகின்றது. பிரேமதாஸா முந்திக்கொண்டு வெலிஓயா குடியேற்றத்தை வாபஸ் பெறுவாரா? அத்தனை தேசபக்தியும் தொலை நோக்கும் இராஜதந்திரமும் பிரேமதாசாவுக்கு உள்ளதா என்பது தெரியவில்லை. எனினும் இத்தகைய அணுகுமுறை ஒன்றினால் மட்டுமே இலங்கைத்தீவில் "சைப்பிரஸ் சூழல்" ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துவது சாத்தியம். இத்தகைய ஒரு சூழலை இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தை ஏற்படுத்தத் தவறுமாயின் அது பின்னர் திருத்தவியலாத வரலாற்றுத் தவறாக அமைந்துவிடும்.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுவருகின்ற மற்றொரு முக்கிய மாறுதல் முஸ்லீம் மக்கள் - இந்திய இராணுவ உறவுகள் தொடர்பானதாகும். இந்திய, EPRLF அணிக்கு கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள முக்கிய நெருக்கடி முஸ்லீம் மக்களின் எதிர்ப்பாகும். இது EPRLF அமைப்பும் ENDLF போன்ற ஏனைய இந்திய ஆதரவு அமைப்புகளும் முஸ்லீம்களுக்கு எதிரான குறுகிய தமிழ் வகுப்புவாத நிலைப்பாட்டை எடுத்தமையால் உருவான சிக்கலாகும். பட்டிருப்பு, கல்முனை பிரதேசங்களில் குறிப்பாக காரைதீவில் வாழும் தமிழ்மக்களது குறுகிய முஸ்லீம் விரோத வகுப்புவாதத்துக்கு துணைபோனதன் மூலமே EPRLF தன்னை இப்பகுதிகளில்

www.tamilarangam.net

பலப்படுத்தியுள்ளது. இந்தச் சூழலுக்கு குறிப்பாக வட இந்தியப் படையினரது முஸ்லீம் விரோதப் போக்கும் துணைபோயிருக்கின்றது. முஸ்லீம்களை மிரட்டி அடிபணியவைக்கும் இந்தியாவின் முயற்சியும் பயனளிக்கவில்லை. இறுதியில் நிலைமைகளை செம்மைப்படுத்தும் முயற்சிகளில் இந்தியா தீவிரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளது. இதனடிப்படையில் முஸ்லிம் இராணுவ அதிகாரிகளது தொகை கிழக்குமாகாணத்தில் அதிகரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. EPRLFஉம் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முஸ்லீம் ஒருவரை (திரு. அபுயூசுப்) மாகாணசபை அமைச்சராக நியமித்துள்ளது. மாகாணசபையிலோ அல்லது கொழும்புப் பேச்சுவார்த்தையிலோ முஸ்லீம் நியமனத் தலைவர்களை ஈடுபடுத்துவதன்மூலம் முஸ்லீம் மக்களை வென்றெடுப்பது சாத்தியமில்லை. முஸ்லீம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களை அங்கீகரித்து அவர்களை அனுசரித்து செயற்பட முன்வருவது ஒன்றே முஸ்லீம் மக்களை வென்றெடுப்பதற்கான அணுகுமுறையாகும். சிங்கள அரசுகள் உருவாக்கிய குமாரசூரியர் போன்ற தமிழ் நியமன தலைவர்களால் சாதிக்கவியலாததை தமிழமைப்புகள் உருவாக்கும் முஸ்லிம் நியமனத் தலைவர்கள் சாதிக்கப் போவதில்லை. எனினும் அண்மைக்கால இந்திய அணுகுமுறைகள், கிழக்குமாகாண முஸ்லிம் மக்களது இந்திய விரோதப் போக்கில் பாதிப்பையேற்படுத்தியுள்ளது என்றே தோன்றுகின்றது. இலங்கை இராணுவத்தாலும், அதன் உதவியுடன் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றத் திட்டங்களாலும் அனுபவித்த துன்பங்களையும் முஸ்லீம் மக்கள் மறந்துவிடத் தயாராகவில்லை. இந்தியாவின் புதிய அணுகுமுறை ஓரளவு பயன்தரத் தொடங்கியுள்ளதாகவே தெரிகின்றது. அண்மையில் முஸ்லீம் காங்கிரஸ் வட்டாரங்களில் இருந்து "இந்தியப்படை இருந்தாலும்

## நிதர்சனங்களோடு மட்டும்...

களங்கமற்ற
புனிதப் பயணம்போல்
கம்பீரமான
தொய்யாத நடை.

பனித்துளிகள் சிரித்த புற்கள்
நசிகின்றன.
உயிருக்கு ஊசலாடும்
உணர்வுகளின்
அபத்தமான துடிப்பு.
அதனையும்
முடிமறைத்துவிட்ட
சமாதானத்துடன்
ஈரப் புற்கள்
நசுக்கப்படுகின்றன.

பொழுது புலருமென்ற
நிதர்சனம் மட்டும்...
கருமுகில்களைப் பற்றி
அக்கறை எதுவுமில்லை.

கண்களுக்குப் புலப்படாத
வெட்டவெளியை
நோக்கிப் பயணம்.
நசிந்து துவளும்
புற்களின் கணக்கெடுப்பு
கரிசனைக்கற்றவையாக...?!

அபத்தமான துடிப்புமட்டும்
இன்னமும் ஓயாமல்...

- ராஜி -
(ஸ்தவாங்கர்)

www.tamilarangam.net

முஸ்லீம்களுக்குப் பாதுகாப்பில்லை இந்தியப்படை போனாலும் முஸ்லீம்களுக்குப் பாதுகாப்பில்லை" என்ற குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

முஸ்லீம்களுக்கு கொடுமை செய்தது இந்தியப்படையினரல்ல அவர்களது ஆதரவு இயக்கங்களே என்றும் முஸ்லீம் மக்களது தலைவர்கள் சிலர் இப்போது குறிப்பிடத் தொடங்கியுள்ளனர்.

கிழக்குமாகாணத்தில் ஏற்பட்டுவருகின்ற மாற்றங்களை புரிந்துகொள்ளாமல் எதிர்காலத்தில் இலங்கை தொடர்பான இந்திய இராணுவ உபாயம் எத்தகைய மாற்றங்களுக்கு உள்ளாகக் கூடும் என்பதைப் புரிந்துகொள்வது சாத்தியமில்லை.

அண்மையில் இடம்பெறவுள்ள இந்தியப் பொதுத் தேர்தலுக்கும், நவம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ள "சார்க்" மாநாட்டுக்கும் முன்னதாக இந்தியா தனது படைகளில் பெரும்பகுதியை வாபஸ் பெற்றாக வேண்டியிருக்கும். இதனைத் துரிதப்படுத்தும் வகையிலும் இந்திய எதிர்க்கட்சியினரது "இலங்கையிலிருந்து இந்தியப் படைகளை வாபஸ்பெறு" இயக்கத்தைப் பலப்படுத்தும் வகையிலும் இந்திய இராணுவத்துக்குப் பாரிய சேதங்களை விளைவிக்கத்தக்க தாக்குதல்களில் J V Pயினரும், J V P போர்வையில் இலங்கை இராணுவத்தினரும், விடுதலைப் புலிகளும் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். இந்த நிலைமையை இந்தியா எவ்வாறு அணுகிவருகின்றது?

இலங்கையில் பெருமளவிலான கலப்புஇராணுவத்தை வைத்திருப்பதற்குப் பதிலாக சிறந்த பயிற்சியும், கடுகதியும் கட்டுப்பாடான பணிப்புகளும் கொண்ட பத்தாயிரம் கொமாண்டோ அதிரடிப்படைகளை வைத்திருப்பது வாய்ப்பானது என்று இந்திய இராணுவ நிபுணர்கள் சிலர் கருதுகின்றார்கள் (INDIA TODAY). இந்தியப் படைகளது வாபஸ் இந்த அடிப்படையில் நிகழலாம். இது இலங்கை தொடர்பான இந்திய இராணுவ மூலோபாயத்தில் பாரிய மாற்றம் ஏற்படவுள்ளதையே தொட்டுக்காட்டுகின்றது. பெருமளவு கலப்பு இராணுவத்துக்குப் பதிலாக சிறு அளவிலான அதிரடிப்படைகள் என்ற இராணுவத் தத்துவத்துக்கு விடுதலைப் புலிகளுக்கெதிரான இந்தியப் படையினரின் மோதலில் நேரடி யுத்தத் தன்மையை தவிர்த்து கொரிலாத் தன்மையை அதிகரிப்பது என்பது பொருள்.

இத்தகைய இராணுவத் திட்டத்தை செயற்படுத்துவதாயின் தளப்பிரதேசம் தேவை. தளப்பிரதேசத்தில் மக்களது ஆதரவு தேவை. இந்திய அதிரடிப் படைகளிடமிருந்து தளப்பிரதேசத்தின் நீள்கோட்டுப் பாதுகாப்பை (LINEAR DEFENCE) பொறுப்பெடுக்கத்தக்க பிரதியீடாக வல்லமையுள்ள உள்ளூர் இராணுவ அமைப்புத் தேவை. பலமான இராணுவம் ஒன்றை உருவாக்குவது, தனது மேலாதிக்கக் கனவுகளுக்கு குந்தகம் விளைவிக்காத வகையில் பெருமளவு படைக்குறைப்பை மேற்கொள்ளுவதற்கும், இராணுவச் செலவீனங்களையும் உயிரிழப்புகளையும் குறைப்பதற்கும் அவசியம் என்பதை இந்தியா உணர்ந்துள்ளதாகத் தெரிகின்றது.

இத்தகைய சூழலை உருவாக்கும் முயற்சி நடைபெறுகின்றது என்று எடுத்துக்கொள்வோமானால், EPRLF தலைமையில் பாரிய நேரடி இராணுவப் பிரிவொன்று அமைக்கப்பட்டுவருகின்றது என்ற முடிவுக்கு நாம் வரவேண்டியிருக்கும். மாகாணசபை அரசியலில் திரு.பத்மநாபா கலந்துகொள்ளாமல் விலகியிருப்பதன் பின்னணியையும் இந்தவகையில்தான் நாம் புரிந்துகொள்ளவேண்டியிருக்கும்.

கிழக்குமாகாணத்தை இந்திய, EPRLFஅணி தமது தளப்பிரதேசமாக கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றதா? இத்தகைய பின்னணியில்தான் திருகோணமலை மாகாணசபையின் தலைநகராக்கப்பட்டதா? ஆம் என்றே படுகின்றது.

இந்திய இராணுவ விலக்கல் இத்தகைய அடிப்படையில் மேற்கொள்ளப்படுமானல் என்ன நிகழும்? கிழக்குமாகாண கடற்கரைப் பிரதேசங்கள், வடபகுதி நகர்மயமான பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலிருந்து இந்திய இராணுவம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விலக்கிக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கலாம். ஏற்படக்கூடிய இராணுவ சூனிய வலயங்களுள் இலங்கை இராணுவம் புகுந்தால் அவர்களை எதிர்ப்பதன்மூலம் இலங்கை இராணுவத்திடமிருந்து தமிழ்மக்களைப் பாதுகாக்கின்றவர்கள் என்ற பாத்திரத்தை இந்திய, EPRLFஅணியினர் தட்டிக்கொண்டு போகலாம். இது விடுதலைப்புலிகளின் செல்வாக்கைப் பாதிக்கும். இதனைத் தவிர்ப்பதானால் வடக்குக் கிழக்கு மாகாணங்களுள் செயற்பட இலங்கை இராணுவத்துக்குப் பதிலாக தமிழ்ப் போராளிகளையும் முஸ்லீம் இளைஞர்களையும் பெரும்பான்மையாகக் கொண்ட புதிய இராணுவப்பிரிவு அமைக்கப்படவேண்டியிருக்கும். இதற்கு இலங்கையரசு சம்மதிக்குமா? சம்மதிக்காவிட்டால் இலங்கையரசு, புலிகள் உறவு ஆக்கபூர்வமாக நீடிக்கும் வாய்ப்பில்லை. இது விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டுள்ள இராஜதந்திர சிக்கலாகும். வடக்குக் கிழக்கு மாகாணங்களுள் இலங்கை இராணுவம் புகுவதை தமிழ்மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள் என்ற அடிப்படையில்தான் இந்தச் சிக்கலின் தாற்பரியம் உணரப்படலாம்.

சோவியத் இராணுவம் வெளியேறிய சிலமணித்தியாலங்களுள் நஜிபுல்லா அரசு கவிழ்ந்துவிடுமென்று மேற்கு நாடுகளில் கருதப்பட்டது. எனினும் நஜிபுல்லா அரசு நிலைத்திருக்கிறது. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருப்பினும் எதிர் அணிகளின் ஒற்றுமையின்மையும் ஒரு காரணமாகும்.

அப்கானிஸ்தான் நிலைமைகளை இந்திய இராணுவ நிபுணர்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். கற்றுக்கொள்கின்றனர். எனினும் இலங்கையிலுள்ள இந்திய எதிரணியினர் (இலங்கையரசு, விடுதலைப்புலிகள், ஜே.வி.பி.) ஆப்கானிஸ்தான் அனுபவங்களில் இருந்து இன்னமும் போதிய அளவு கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

இந்தியாவின் புதிய இராணுவ மூலோபாயம் தொடர்பாக EPRLFக்கு உள்ள பெரிய சிக்கல் போதிய ஆளணியைத் திரட்டுவதுதான். ஏனைய இயக்கத் தலைமைகளை பலகீனப்படுத்துவதன்மூலம் கீழ்மட்ட அங்கத்தவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு கொடூரமான தந்திரத்தை அவர்கள் பயன்படுத்துகின்றார்கள் என்று தெரிகின்றது. ரெலோக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளையும், தொடர்ச்சியாக ஈரோஸ் அங்கத்தவர்கள் கொலை செய்யப்படுவதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதேவேளையில் விடுதலைப்புலிகளது ஏனைய இயக்கம் சார்ந்தவர்களையும், சார்ந்திருந்தவர்களையும் வேட்டையாடும் குருட்டுப்போக்கும் ஆள்சேர்ப்பது தொடர்பாக EPRLFக்கு பெருமளவில் உதவிபுரிந்துள்ளது. இந்திய இராணுவத்துடன் ரெலோ, புளொட் போன்ற அமைப்புகளுக்கு ஏற்பட்டிருந்த முரண்பாடுகளை விடுதலைப்புலிகள் அமைப்பினர் பிழையாக கையாண்டுள்ளனர்.

ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடியபோது தமது பரமஎதிரியும் பாதகனுமாகிய 'சியாங்கை சேக்கை'க்கூட ஜப்பானின் பக்கம் தள்ளிவிடாமல் அணைத்துக்கொண்டது சீனக்கம்யூனிஸ்ட கட்சி. வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளாமல் வரலாற்றில் நிலைப்பது சாத்தியமில்லை.

இந்தியாவின் புதிய வியூகத்தை உடைப்பதானால் இந்திய, EPRLF அணியினர் தவிர்ந்த ஏனைய இயக்கங்களையும், தமிழ் முஸ்லிம் அரசியலமைப்புகளையும், உதிரி பிரமுகர்களையும் கொண்ட பரந்துபட்ட ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பி, அதன் அபிலாசைகளுக்கு விட்டுக்கொடுத்து செயற்படுவதற்கும் விடுதலைப்புலிகள் முன்வரவேண்டியிருக்கும்.

கியூபாப் புரட்சியாளர்கள், பாஸ்டிட்டா சர்வாதிகாரியின் படையில் இருந்தவர்களை வழிதவறிய கியூபமக்களாக அங்கீகரித்து மனிதாபிமானத்துடன் அணுகினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அத்தகைய அணுகுமுறையே கியூபப் புரட்சியின் வெற்றியை இலகுவாக்கிற்று.

தனது மரபுசார்ந்த சுத்த இராணுவ மூலோபாயங்களைக் கைவிட்டு விட்டு பொருத்தமான அரசியல் இராணுவ மூலோபாயத்தை கைக்கொள்ளுவது விடுதலைப்புலிகளுக்கு இலகுவாக இருக்குமா?

யூலை 5ஆந் திகதி வடக்குக் கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பான சர்வசன வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. வழமைபோலவே இது பின்போடப்படும். வடக்குக் கிழக்கு மாகாண இணைப்பை கேள்விக்குறியாக்கிக்கொண்டு ஒரு பேச்சுவார்த்தையைத் தொடர்வதில் அர்த்தமில்லை.

இந்திய, EPRLF அணியினர் வெறுமனே வேடிக்கைபார்த்துக் கொண்டிருக்கவில்லை என்பதை பிரேமதாசா உணர்ந்துகொண்டால் வெலிஓயா குடியேற்றத்திட்டத்தை உடனடியாக வாபஸ்பெற ஒப்புக்கொள்வார். இந்த அளவுக்கென்றாலும் இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தை முன்னேறுவிட்டால் அது இலங்கையரசையும் விடுதலைப்புலிகளையும் பாதிக்கும்.

## - பாரதி -

பேச்சுவார்த்தைகள், சமஸ்டியமைப்பு, கொலைகார இலங்கை இராணுவத்துக்குப் பதிலாக தமிழ் - முஸ்லிம் போராளிகளை உள்ளடக்கிய புதிய இராணுவப்பிரிவு என்ற திசையில் முன்னேறினால் மட்டுமே இப்பேச்சுவார்த்தையைப்பற்றி தமிழ்மக்கள் அங்கீகரிப்பார்கள். தமிழ்மக்களது அங்கீகாரம் பெறுமல் புதுடெல்கியின் பிடியில் இருந்து இலங்கைத்தீவை மீட்கும் போராட்டத்தில் கொழும்பு ஒரு அடிகூட முன்னேறும் சாத்தியமில்லை.

புதிய நிலைமைகளால் பாதிப்படையப்போகின்றவர்களுள் ஈரோஸ் அமைப்பினரும் அடங்குவர். தமது பலமான தளங்களை கிழக்குமாகாணத்தில் வைத்திருக்கும் இந்த அமைப்பினரை இந்திய, EPRLFஅணியினர் தமது கட்டுப்பாட்டுக்கு வெளியே சுதந்திரமாக இயங்க இனியும் அனுமதிப்பார்கள் என்று நம்புவது கடினம். வலுச்சண்டைக்கு இழுப்பதன்மூலம் இவர்கள் மறைத்துவைத்திருப்பதாகக் கருதப்படும் ஆயுதங்களை வெளியே கொண்டுவரும் முயற்சிகள் ஏற்கெனவே தொடங்கிவிட்டது. ஈரோஸ் அமைப்பின் சரணுகதியையே இந்தியா விரும்புவதாகத் தெரிகின்றது.

## நாளைய நாயகி

சமுதாயங்களைச் சாட்டி - எம்
சந்தர்ப்பங்களைப் பறித்த
சந்தர்ப்பவாதிகளுக்கு
கனவுகளிலும் வந்து
தொல்லை கொடுக்காதீர்கள்
ஏனெனில்;
சுதந்திரத்தின் சுகத்தை
தூங்கிக்கொண்டே சுவைக்க
இன்றைய நாயகிகளுக்கு மட்டுந்தான்
தெரிந்திருக்கிறது.
உள்ளங்களை நேசிக்கவும்,
உதயங்களைச் சுவாசிக்கவும்
நம் இமைகள்
செருகிட வேண்டும்
இதெல்லாம் புரிந்துமென்ன...
புதரினுள் பூட்டிவைத்த
புரையோடிய புதையல்களைத் தேடி
இன்றைய நாயகிகள்...!
நமது நிஜங்களில்
எமது தலைகள்
நிமிர மறுத்து
இரவின் கனவில்...
நாளைய நாயகிகளை
உருவகம் பண்ணி...
நம் நிதர்சனம் இனிவரும்
நாளைய நாயகிக்காக.

கலிஸ்ரா இராசநாயகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமறைவாகி சிங்களப்பகுதிகளில் நிலைகொண்டு செயற்படுவது தொடர்பாக மிகவிரைவிலேயே ஈரோஸ் முடிவு எடுக்கவேண்டியிருக்கும்.

புதிய நிலைமைகளால் கொழும்பு EPRLFக்கு பாதுகாப்பற்ற பிரதேசமாகிவிட்டது. இவர்களது இடதுசாரி நண்பர்களே இவர்களை கைவிடத் தொடங்கியுள்ளனர். கம்யூனிஸ்ட்கட்சி தொடர்ந்தும் EPRLF அரசில் அங்கம்வகிப்பது சாத்தியமில்லை. கொழும்பில்வைத்தும் கிழக்குமாகாணத்தில் வைத்தும் EPRLF இனரை தாக்கியழிக்கும் முயற்சிகளில் JVPயினரும் JVPமுகமூடியில் இலங்கை இராணுவத்தினரும் இனித் தீவிரமாக ஈடுபடலாம். இத்தகைய பாணியில் இந்திய இராஜதந்திரிகளும் இந்திய இராணுவத்தினருங்கூட தாக்கப்படலாம்.

நிலைமை எப்படி வளர்ச்சியடைந்தாலும் ஈழத்தாய்மண் தனது புதல்வர்களது குருதியில் நனைந்து சேருகின்ற துர்ப்பாக்கியந்தான் சிலகாலத்துக்கு தொடரப்போகிறது.

இந்தியப்படைகளது வெளியேற்றந்தொடர்பான சூழலை உருவாக்க EPRLFஉம் புலிகளும் பேசவேண்டுமென்ற நிபந்தனையை இந்தியா முன்வைக்கலாம். இந்த நிபந்தனையை பலப்படுத்தும்வகையில் ஆப்கான்பாணியில் கிழக்குமாகாணத்திலும் வடமாகாண எல்லைப்புறங்களிலும் EPRLFஐ இந்தியா பயன்படுத்தலாம். இந்த நிபந்தனைக்கு ஒப்புக்கொள்ளாவிடின் ஈழப்பிரகடனம், சிங்களக் குடியேற்றக் கலைப்பு போன்ற சூழ்நிலையை இந்திய, EPRLFஅணியினர் ஏற்படுத்தலாம். இந்த நிலைமை நாம் ஒருபோதும் எதிர்பார்க்கமுடியாத பேச்சுவார்த்தைக்கு வழிசமைக்கலாம். (15.06.89)

---


## கைகொடுங்கள் இந்தக் கண்மணிக்கு!

அருணா!

கிழக்கீழத்தைச் சேர்ந்த மூன்றுவயதுச் சிறுமி.

இந்தச் சின்னஞ்சிறு மலருக்கு இருதயத்தில் துவாரம்.

என்ன கொடுமை!

இவள் உயிர்பிழைக்க ஏறத்தாழ இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய்கள் தேவையாம்.

எவரிடம் போவார்கள் இவளின் ஏழைப் பெற்றோர்கள் இவ்வளவு தொகைப் பணத்துக்கு?

ஏன் நாங்கள் இல்லையா?

இங்கிருக்கும் நாமெல்லாம் இதயமற்றவர்களா என்ன?

எங்களால் இயன்றதை அனுப்பிவைத்து இந்தப் பிஞ்சுமகள் உயிர்காப்போம்!

கைகொடுப்போம் இந்தக் கண்மணிக்கு!

NYTT LIV TIL ARUNA
1006 GRANDSTANGEN - 22B
1051 OSLO 10

ABC வங்கிக் கணக்கிலக்கம் : 1607 84 53242

(மேலதிக விபரங்கட்கு : (02) 32 83 84)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகள்

எதற்குமே கண்கலங்காத பலரையும் கண்ணீர்விட்டு அழவைத்த யாழ் நூலக எரிப்பு நிகழ்ந்து எட்டு வருடங்கள் கடந்துவிட்டன. இச்சேதி கேட்டு தமிழ் அறிஞரான கத்தோலிக்க துறவி தாவீதடிகள் மாரடைப்பால் காலமானார். தலைசிறந்த ஓவியக் கலைஞர் மார்க் அவர்கள் தெரு ஓரத்து தண்ணீர்க் குழாயடியில் மூர்ச்சித்து விழுந்தார். "புத்தன் இறந்துவிட்டான், அவனைக் கொன்ற இலங்கை இராணுவத்தினர் சடலத்தை யாழ் நூலகத்துள் வீசித் தீவைத்துவிட்டனர்" என்று பிரபல கவிஞர் எம்.ஏ.நு∴மான் பிரகடனம் செய்தார். இவை வெறும் சேதிகளல்ல. தமிழ் பேசும் மக்களது வரலாற்றுத் திருப்பத்தின் சுவடுகளாக நிலைத்திருக்கும் நினைவுகள்.

மாபெரும் தலைவர் ஒருவரது மறைவுக்கு அஞ்சலி செய்வதுபோல கண்ணீருடன் நூலக வளாகத்தை நோக்கி தமிழ் பேசும் மக்கள் அணிவகுத்து வந்தனர். சில நூறு யார் தூரத்தில் துரையப்பா விளையாட்டரங்கத்தில் நின்று பிசாசுகள்போல இலங்கை இராணுவத்தினர் வெறிக்கூத்தாடி நையாண்டி செய்ததை அவர்கள் பொருட்படுத்தவில்லை. பலர் துணிச்சலுடன் அந்தத் திசையை நோக்கி காறி உமிழ்ந்தனர். இதுவே நமது வரலாற்றின் திருப்புமுனையாயிற்று - போராட்டத்தில் மட்டுமல்ல மாணவர்களாகவும் அகதிகளாகவும் மேல்நாடுகளுக்கு ஓடிவந்த வரலாற்றிலும்தான்.

இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் வசதியுடன் வாழுகின்ற நம்மவர்களில் பலர் இந்த விடயங்களை மறந்துபோய்விடுவது சாத்தியமா?

யாழ் நூலகத்தின் வளர்ச்சியில், ஏன் வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதிலுமே நூலக அமைப்பின் வளர்ச்சியில் வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழனுக்கும் தார்மீகக் கடமைகள் உண்டு.

நூலகர் கல்வியில் மாணவர்களை ஊக்குவிக்கும் புலமைப் பரிசில்களை யாழ், மட்டக்களப்பு பல்கலைக் கழகங்களுக்கு ஏற்பாடு செய்துதருவது நூலகக் கட்டடங்களுடன் மைக்கிரோபிலிம் சாதனங்கள் போன்ற நவீன வசதிகளை ஏற்படுத்தித் தருதல், கொழும்பு சுவடிகள் திணைக்களத்திலும், பிரிட்டிஸ் நூலகத்திலும் ஏனைய சர்வதேச நூலகங்களிலும் உள்ள நமது வாழ்வோடும் வரலாற்றுடனும் சம்பந்தப்பட்ட நூல்களதும், பதிவேடுகளதும் மைக்கிரோபிலிம் பிரதிகளை பெற்றுத்தருவது என இப்பணி பாரியது.

மேல்நாடுகளில் இதுகாலும் தமிழிலும் பல்வேறு மொழிகளிலும் நம்மைப்பற்றி வெளிவந்த பிரசுரங்கள், செய்திகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பவை யாவுமே சேகரிக்கப்படவேண்டியது முக்கியமாகும். இப்பணியுடன் ஈழத்து நூலக அபிவிருத்தி இயக்கம் செயற்படத் தொடங்கலாம்.

இத்தகைய வரலாற்றுப் பணியை ஆரம்பித்த பெருமை நோர்வேத் தமிழர்களுக்கும் அமைப்புகளுக்கும் சேரட்டும்.

"எனக்கு நல்ல நூலகத்தைத் தாருங்கள் வரலாற்றை மாற்றுகின்றேன்" என்கின்ற ஈழத்தாய்க்கு நீங்கள் கூறும் பதில் என்ன?

சுவடுகள் யூன் 1989.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆட்டிறைச்சி உட்பட எல்லாவிதமான ஆசிய உணவுப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய நிறுவனம்

ZAHOOR STORE

NORDBYGT. 15,
0187 OSLO 1.

TLF: (02) 19 97 91

www.tamilarangam.net



# ஒரு
# வரலாற்றுக் கறை!

"எங்களிடம் கலவரத்தை அடக்கும் உபகரணங்கள் இல்லாமையினால்தான் மாணவர்களைக் கொல்ல நேர்ந்தது."

- சீனப் பிரதமர் லீ பெங்





www.tamilarangam.net

உலகமே ஒருமுறை திடுக்கிட்டது.

ஊழலற்ற நிர்வாகம் வேண்டும்! எழுத்துச் சுதந்திரமும் பேச்சுரிமையும் வேண்டும்!! ஜனநாயக உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்!!! என்று கோசமிட்ட நிராயுதபாணிகளான பல்கலைக்கழக மாணவர்கள்மீது, மாஓவின் மகத்தான புரட்சிக்குத் துணைபோன மக்கள் இராணுவம் துப்பாக்கிக் குண்டுகளைச் சரமாரியாகப் பொழிந்து, பலநூற்றுக்கணக்கான மாணவர்களைப் பலிகொண்டு, சீன வரலாற்றின் புதிய அத்தியாயங்களை இரத்தத்தினால் எழுதியது. "கலவரங்களை அடக்கும் உபகரணங்கள் எங்களிடம் போதியளவு இருக்கவில்லை. அதனால்தான் மாணவர்களைக் கொல்ல வேண்டி நேர்ந்தது" என்று அமைதியாகச் சிரித்தபடி பேட்டியளித்துள்ளார் சீனப் பிரதமர் லீ பெங்(Li Peng).

முதலாளித்துவ நாடுகளில் "பசிக்கிறதே" என்று ஓலமிடுபவன் ஒரு "கம்யூனிஸ்டாக" அடையாளம் காணப்படுவது போலவே, சோசலிச நாடுகளில் "ஜனநாயகம்" என்ற வார்த்தையை உச்சரித்தவன் ஒரு "எதிர்ப்புரட்சியாளனா"க் கருதப்படுவது ஒரு மரபாகி விட்டது.

"ஒரு சில எதிர்ப்புரட்சியாளர்கள், ஒரு பூர்சுவாக் குடியரசை சீனாவில் நிறுவ எடுத்த முயற்சிகளை மக்கள் இராணுவம் முறியடித்தது" என்று தங்கள் பிணவாடை வீசும் வாய்களால் வெட்கமின்றி சொல்கிறார்கள் சீன ஆட்சியாளர்கள். ஆனால் இவர்கள் நினைப்பதுபோல் உலகம் கண்ணை மூடிக்கொண்டிருக்கவில்லை. எவ்வித வன்செயலிலும் ஈடுபடாமல், ஜனநாயகத்தேவதைக்குச் சிலையமைத்து, அமைதியான முறையில் தங்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொன்ன அப்பாவி மாணவர்களை "எதிர்ப்புரட்சியாளர்கள்" என்று இவர்கள் சொன்னால் அதை நம்பிவிட உலக மக்கள் என்ன பைத்தியங்களா?

மாவோவின் மறைவுக்குப்பின் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப்பீடத்தில் நடந்த இழுபறிகள் உலகத்துக்கு நன்கு தெரிந்த விடயங்களே. குவாகுவா பெங்கின் குறுங்கால ஆட்சியின் பின் பதவிக்கு வந்த டெங் சியாவோ பெங் (Deng Xiao Peng) தன்னை ஒரு சீர்திருத்தவாதியாக (Reformist) காட்டிக்கொண்டார். அதியுயர் பதவிகளை தான் எற்க மறுத்ததோடு மட்டுமல்லாமல் முக்கிய பதவிகளில் தன் ஆதரவாளர்களை நியமித்து, அவர்களூடாகவே தன் அதிகாரத்தைச் செலுத்தினார். இவரது காலத்தில் சீனாவின் பொருளாதார, வெளிநாட்டுக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை நடைமுறைபபடுத்தினார். ஏண்பத்தி நான்கு வயதான இவரின்பின் சீனத் தலைமையை யார் பெறுவது என்பதில் பல நாட்களாக கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடத்தில் நடந்துவரும் குத்துவெட்டுகளின் பிரதிபலிப்பே இந்தப் படுகொலையாகும். தனக்குப்பின்னால் பதவிக்கு வரத்துடிக்கும் மிதவாதிகளையும் தீவிரவாதிகளையும் சமப்படுத்துவதற்காக கட்சி, அரசாங்கம், இராணுவம் ஆகிய மூன்று அமைப்புகளிலும் அவர்களின் சமபலத்தைப் பாதுகாத்து வந்தார் டெங். ஒரு காலத்தில் இவரின் நமபிக்கைக்குரியவரும், பின்னால் டெங்கினால் கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்டவருமான சீர்திருத்தவாதி குயாபெங்கின்(Huya Peng) மரணத்திலிருந்தே சீனாவின் குரூரமான கதை ஆரம்பமானது. மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்த குயா பெங்கின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட மாணவர்கள், ஜனநாயகரீதியிலான சீர்திருத்தங்களை வற்புறுத்திய அவரின் மறைவுடன் ஜனநாயகத்துக்கான போராட்டம் மடிந்துவிடக் கூடாதே என்ற ஆவேசத்தில் தியனன்மேன் சதுக்கத்தில் புகுந்துகொண்டு தங்கள் ஜனநாயகத்துக்கான அமைதிப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அதன் பின் நடந்தவற்றைப் பத்திரிகைச் செய்திகள் சொல்லும்.

www.tamilarangam.net

குயா பெங்கின் பின் கட்சிச் செயலாளராகப் பதவியேற்ற சாகோ (Zhao) சீர்திருத்தப் போக்குடையராக இருந்தமையால் போராட்டங்களை நடத்தி வரும் மாணவர்களின் மீது அனுதாபம் கொண்டவராக இருந்தார். அதனால் மாணவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படியும், பீக்கிங்கில் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தும் படியும் டெங் விடுத்த கோரிக்கையைப் புறக்கணித்தார். இவரது ஒத்துழைப்புக் கிடைக்காததினால் தீவிரவாதப் போக்குடைய பிரதமர் லீ பெங்கையும், (ஜனாதிபதியை ஒத்த) இராணுவத் தலைமைத் தளபதியான எண்பத்திநான்கு வயதான யாங் சாங் குண் (Yang Shan Kun) ஐயும் தன் கருத்துக்கு இணங்க வைத்தார். மாணவர் கிளர்ச்சியைப் பயன்படுத்தி சாகோ தனக்கு அதிக அதிகாரங்களைக் கோருவதையும், படிப்படியாக தனது செல்வாக்கை அதிகரிக்க முனைவதையும் அவதானித்த பெங்கும் யாங்கும் டெங்குடன் ஒத்துழைக்கத் தீர்மானித்தார்கள். மாணவர் கிளர்ச்சியை அடக்கினால் சாகோ போன்ற சீர்திருத்தவாதிகளின் செல்வாக்கை கட்சியில் அடக்கிவிடலாம் என்று கணக்கிட்டார்கள். இவர்களின் திட்டத்தை பீக்கிங்கில் முகாமிட்டிருந்த படைப்பிரிவை விட அனைத்துப் படைப்பிரிவுகளும் ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தைத் தெரிவித்தன. யாங்கின் சகோதரனின் பொறுப்பிலிருந்த ஹெபை (Hebei) மாகாணப் படைப்பிரிவு பீக்கிங்குக்கு வரவழைக்கப்பட்டது. அதிகளவு படிப்பறிவில்லாத முரட்டு விவசாயிகளை வீரர்களாகக் கொண்டிருந்த இப் படைப்பிரிவு தனக்கிடப்பட்ட கட்டளையை அரக்கத்தனமாக நிறைவேற்றவே மாணவர்களின் போராட்டம் பரிதாபமாகச் சிதைக்கப்பட்டது. எதிர்காலத்திலும் இத்தகைய போராட்டங்கள் தொடரக் கூடாது என்பதற்காக பல்லாயிரக்கணக்கானோர் இன்றுவரை கைது செய்யப்பட்டவண்ணம் உள்ளனர். இந்தக் கணத்தில் ஆட்சியாளர்கள் தாங்கள் வென்றுவிட்டதாக வெட்கமின்றிச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் இவர்களைப்போன்ற மக்கள் விரோதிகள் பலரின் வீழ்ச்சிகளை வரலாறு காட்டும். காலம் பிந்தலாம். ஆனால் வரலாறு பொய்ப்பதில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

– ரகுவரன் –

---

<u>எகிப்து</u>

முதன்முதலாக அரபுமொழியில் எழுதப்பட்ட புத்தகமொன்றுக்கு 1988ஆம் ஆண்டுக்கான நோபல்பரிசு கிட்டியுள்ளது. 77வயதுள்ள எகிப்து நாவலாசிரியர் 'நகிப் மபெளிஸ்'தான் முதன்முதலில் எகிப்து எழுத்தாளர்களுள் நோபல்பரிசுபெற்றவர் என்ற பெருமையைத் தட்டிச் சென்றுள்ளார். இவர் பெற்ற பரிசுத்தொகை எவ்வளவு தெரியுமா? மூன்று இலட்சத்து தொண்ணூறாயிரம் டொலர்களாகுந்.

<u>பிரேசில்</u>

16வயது வந்தவர்களும் வாக்களிககும் சட்டமூலம் அண்மையில் இந்நாட்டுப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. 16வயதுமுதல் 18வயதுடையவர்கள் வாக்களிக்க வேண்டுமென்ற கட்டாயம் அவசியமில்லை ஆனல், 18வயதுக்கு மேற்பட்டோர் வாக்களிக்காவிட்டால் சட்டப்படி சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும்.

www.tamilarangam.net

அன்புள்ள வாசக நண்பர்களுக்கு,

"ஆயிரம் நன்மைகளைச் செய்து, ஒரு அற்ப காரியத்தால் கெட்டபெயர் வாங்கிவிட்டானே" என்று சிலரை சிலசமயங்களில் நாம் சொல்வதுண்டல்லவா!. அதுபோலத்தான் இந்தக் கம்பியூட்டரும். எத்தனையோ பல அற்புதமான காரியங்களைச் சாதிக்கும் இந்தக் கம்பியூட்டரில் ஒரு சிறு தவறு நிகழ்ந்தால் "ப்ஸ்க்" என்ற சத்தத்துடன் செயலிழந்துபோய்விடும் கொடுமைக்கும் இடமுண்டு. அந்தக் கொடுமை எங்களுக்கு இம்முறை நிகழ்ந்தது. ஒருவாறாக ஒருவாரத்துள் அதனைச் சரிசெய்து கொடுத்தார்கள். முதுகுவலியையும் பொருட்படுத்தாமல் அவசர அவசரமாக சுவடுகளின் ஆக்கங்கள் அனைத்தையும் பதிவுசெய்தாயிற்று. அச்சகத்துக்குப் பறந்தோம். அங்கேயும் ஒரு தடங்கல்! கோடை விடுமுறையில் பல ஊழியர்கள் சென்றிருந்ததனால் எங்கள் வேலையை உடனடியாக செய்யமுடியாது என்று கையை விரித்துவிட்டார்கள். விசேட கட்டணம் செலுத்தி உடனடியாக சுவடுகளை அச்சேற்றும் "வசதி"யான நிலையில் பல சந்தாதார நண்பர்கள் எங்களை வைத்திருக்கவில்லை. வேறு என்னதான் செய்யலாம்? கோடை விடுமுறைக்குச் சென்ற அந்த ஊழியர்களை "வாழ்த்தியபடி" அவர்களாகத் திரும்பிவரும்வரை காத்திருக்கவேண்டியிருந்தது.

நீங்கள் எவ்வளவுதான் பெரியமனதுடன் எங்கள் தாமதத்தை மன்னிக்கத் தயாராகவிருந்தாலும், எங்களால் உங்களிடம் மன்னிப்புக்கோராமல் இருக்க முடியவில்லை.

இன்னொரு முக்கியமான விடயம் ! கடிதம்மூலம் கிடைக்கும் சுவடுகளின் விமர்சனங்களைவிட வழியில், திரிக்கில்(Trikk), தேபான்களில்(T-Bane), கடைகளில் கிடைக்கும் விமர்சனங்களே அதிகமாயிருப்பதனை அவதானித்துள்ளோம். வாசக நண்பர்களே! உங்கள் விமர்சனங்களைச் சிரமமென நினைக்காமல் ஒரு கடிதம்மூலம் தெரிவியுங்கள். அது சுவடுகளின் வளர்ச்சிக்கு எவ்வளவு உதவியாகவிருக்கும் தெரியுமா! எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் சுவடுகளுக்கு எழுதும் எழுத்தாளர்கட்கும், வெளியிடும் எங்களுக்கும் கிடைக்கும் வெகுமதியே உங்களின் விமர்சனக் கடிதங்கள்தான் என்பதனை மறவாதீர்கள்.

கடைசியாக ஒருவிடயம். சுவடுகளின் ஆகஸ்ட் இதழ் இதன் பன்னிரண்டாவது இதழாக அமையும். இந்த இதழை ஒரு சிறப்பிதழாக வெளியிடவும், அனைத்து வாசகர்களைக் கொண்ட ஒரு விமர்சன அரங்கினை ஏற்பாடுசெய்யவும் திட்டமிட்டுள்ளோம். இதன் விபரங்களை அறியத்தருவோம். இச் சிறப்பிதழை அலங்கரிக்க உங்களின் தரமான ஆக்கங்களை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். தவிர, இதுவரை பத்து இதழ்களையும் பெற்றுக்கொண்ட வாசக நண்பர்களின் சந்தா ஆகஸ்டி வெளிவரும் பன்னிரண்டாவது இதழுடன் முடிவடைவதால், அடுத் பன்னிரண்டு இதழ்களுக்குமான (ஒரு வருட) சந்தாவை இப்போ செலுத்தி சுவடுகளை ஆதரிக்குமாறு அன்புடன் கோருகின்றோம்.

ஆசிரியர் குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய சக்தி பிறக்கிறது




வருகின்ற ஆகஸ்ட் மாதத்தில் மக்கள் உயர்நிலைப் பள்ளிக்கு (FOLKE HØGSKOLE) மாணவர்கள் வந்து சேருவதுடன் நோர்வேயில் தமிழர்களது தொகை 4000ஐ எட்டிவிடும்.

மணமாகவேண்டிய வயதைச் சேர்ந்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் நோர்வே தமிழ்மக்கள் குடித்தொகை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு பெண் என்ற வீதத்திலேயே அமைந்துள்ளது. இவ்விடயம் நோர்வீஜிய அதிகாரிகளது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரது ஆண், பெண் விகிதாசாரம் இரண்டொரு வருடத்துள் செம்மைப்படும் எனவும் பெண்கள் தொகை மேலும் ஓரிரு ஆயிரங்களால் அதிகரிக்க எனவும் நியாயமாகவே எதிர்பார்க்கலாம். ஈழத்தில் உயர்கல்வியில் ஆண்களைவிட பெண்கள் முன்னணியில் இருக்கின்றார்கள்.

முன்னைப் போலன்றி கல்வி, பொதுப்பணி, கலைகள் போன்ற பல்துறைகளிலும் ஈழத்துப் பெண்கள் ஈடுபட்டு சாதனைகள் படைத்துவருகின்றார்கள். இத்தகைய சமூக, கலாச்சார மேம்பாடும் விடுதலையும் அடைந்துவரும் ஈழத்துப் பெண்கள் மத்தியிலிருந்துதான் பெண்கள் நோர்வே நாட்டுக்கு வந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். இது நோர்வே நாட்டுக்கு மட்டும் பொருத்தமானதல்ல. தமிழ்மக்கள் கணிசமான அளவு வாழுகின்ற சகல வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் பொதுவான அம்சமாகும்.

வெறுமனே கலாச்சாரம் என்கின்ற குட்டிச்சாக்கினுள் இவர்களை கட்டி மூலையில் தூக்கிப்போட்டுவிட முயல்கின்றவர்கள் நோர்வேயிலும் இருக்கத்தான் செய்கின்றனர். ஒருபக்கம் டப்பாங்கூத்தும் மறுபக்கம் பெண் ஒடுக்குதலுக்கு வக்காலத்து வாங்குவதுமான ஒரு கலாச்சாரத்தை புதிய தமிழர்களது தலைமுறையின் கலாச்சாரம் என்று சொன்னவர்கள் யார்?

நமது வாழ்வில் இருந்தும் மரபுகளிலிருந்தும் போராட்டங்களிலிருந்தும் பெண்களது விடுதலை முனைப்புகளிலிருந்தும் நமது தாய்மண் புதிய கலாச்சாரத்தின் வித்துக்களை முளைக்க வைத்திருக்கின்றது. ஆண்களும் பெண்களும் வானுயர உயர்த்தியுள்ள இந்தப் புதிய கலாச்சாரத்தின் வீச்சு ஈழத்து மண்ணை தாண்டி தமிழ்கூறும் நல்லுலகு எங்கும் வியாபிக்க ஆரம்பித்துள்ளது.

இதன் வெளிப்பாட்டை அண்மையில் ஒஸ்லோவிலும் காணக்கூடியதாக இருந்தது. இளைய கலைஞர்கள், நோர்வே தமிழ்ச் சங்க பத்தாண்டு விழாவில் மேடையேற்றுவதற்காக தயாரித்துவரும் "சக்தி பிறக்கிறது" நாடகத்தின் ஒத்திகையை பார்த்தபோது இப்படித்தான் தோன்றியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1985இல் யாழ்ப்பாண பல்கலைக்கழக பெண்கள் ஆய்வுவட்டம் முதன்முதலாக இந்த நாடகத்தை அரங்கேற்றியது. அப்பொழுதே பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்திய இந்த நாட்டிய நாடக நிகழ்வின் பிரதியில் இருந்து நேரடிப் பிரச்சாரத் தன்மை வாய்ந்த சிலபகுதிகள் நீக்கப்பட்டுள்ளது.

புதிய சூழல், புதிய நெறியாள்கை என்பவை நாடகத்தின் நிகழ்வு வடிவத்திலும் சில மாறுதல்களை புகுத்தியுள்ளது.


தலைசிறந்த வடமோடி கலைஞரும் பிரபல நாடக நெறியாளர்களுள் ஒருவருமான திரு.மௌனகுரு பிரதியெழுதித் தயாரித்த இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாட்டிய நாடக நிகழ்வுக்கு நடனங்களை பரதநாட்டியக் கலைஞர் சாந்தா பொன்னுத்துரை அமைத்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் பல சாதனைகள் புரிந்த கலாச்சாரக் குழுவின் உறுப்பினரான கலைஞர் சர்வேந்திரா, மற்ருேர் உறுப்பினரான தாளவாத்தியக் கலைஞர் கிருபாவின் உதவியுடன் ஆர்வமுள்ள இளைய கலைஞர்களை திரட்டித் தயாரிக்கும் இந்த நாட்டிய நாடகத்தில் பெண் கலைஞர்களே முக்கிய பங்கு வகிக்கின்ருர்கள் என்பதும் நாட்டிய அமைப்பை அவர்களே தயாரித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்தில் புயலான புதியகாற்று தமிழ்கூறும் நல்லுலகிலும் வீசத் தொடங்கியுள்ளது. உங்களது வீட்டு யன்னல்களை அகலத் திறந்துவையுங்கள்.

## அண்டார்ட்டிக்கா

பூமிப்பகுதியில் மிகவும் கடினமான ஐஸ்பாறை அண்டார்ட்டிக்காவின் 'வில்க்கெஸ்லாண்ட்' என்ற பகுதியில்தான் உள்ளது. இப்பகுதியில் படர்ந்துள்ள ஐஸ்கட்டியின் உயரம் 15,670 அடியாகும். இதை எப்படி அளந்தார்கள் தெரியுமா? ஒலியின்மூலம் இந்தப் பரப்பின் ஐஸ்உயரத்தை(கனத்தை) அளந்து தகவலை வெளியிட்டுள்ளனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரிசி வகைகள்
பருப்பு வகைகள்
வாசனைத் திரவியங்கள்
மரக்கறி வகைகள்
பழவகைகள்

*HABIB FOOD A.S*

*Nordbygt. 37B*
*0187 OSLO 1*
*Tel: 68 21 84*

(இரவு 10.00 மணிவரை திறந்திருக்கும்)

www.tamilarangam.net



செல்வி. ப.கிருபாராணி

## உறவுகளின் தரிசனங்கள்

மனசு என்னவோ நம்முடையதுதான் என்றாலும், சிலசமயங்களில் அது நமக்கு அந்நியமாகத் தோன்றுவது ஒரு விசித்திரமான உண்மைதான். கடந்த இரண்டுமாதங்களாக இரவு பகலாக தன்னை வாட்டிவதைப்பது தன் மனசுதானா என்று மாரித்துக்குச் சந்தேகமாகவிருந்தது. இல்லையென்றால், இருபத்தேழு வருடங்களாக இல்லாத அவசியம் இப்போது ஏன் தோன்றவேண்டும்?

இன்றுடன் ஏழாவது தடவையாக மாரித் இந்த நிலையத்தின் வரவேற்பறையில் காத்துக் கொண்டிருக்கிறாள்.

இன்றாவது அவளுக்குப் பதில் சொல்வார்களா அல்லது வழமைபோல "தாமதத்துக்கு மன்னித்துக்கொள்; அடுத்தவாரம் வா!" என்று சொல்லிவிடுவார்களா என்று அங்கலாய்த்துக்கொண்டாள் மாரித்.

இன்று அவளது தாய் ஹில்டரூண் தொலைபேசியில் வழமைபோலக் கதைத்தபோது, தான் இன்றும் இங்கு வரவிருப்பதை சொல்லக்கூடாது என்றுதான் முதலில் நினைத்தாள். ஆனால் ஏனோ தெரியாது சொல்லிவிட்டாள்.

"இன்னும் நீ அந்தத் தாசிமகனைத் தேடுவதைக் கைவிடவில்லையா?"

ஹில்டரூணின் தொலைபேசி கடுஞ்சினத்துடன் செத்துக்கொண்டது.

மாரித்துக்குத் தன் தாய்மேல் பரிதாபந்தான் ஏற்பட்டது.

அவளின் தாய் நினைக்கவிரும்பாத உறவை, மறக்கவிரும்பும் நாட்களையல்லவா இவள் மீண்டும் நினைவுபடுத்தப் போகிறாள்! ஆனால் தன்பக்கம் இருக்கும் நியாயத்தை தன் தாய் ஏன் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாள் என்று சற்றுக் கவலைப்பட்டுக் கொண்டாள்.

www.tamilarangam.net

அவள் யாரைத் தேடுகிறாள்?

தனக்கு உயிர்கொடுத்த ஒரு மனிதனையல்லவா தேடுகின்றாள்!

தன் தாயின் கோபத்தை அவளால் புரிந்துகொள்ள முடிகின்றது. "அம்மாவின் நிலையில் நானிருந்தால் நானும் இப்படித்தான் ஆத்திரப்பட்டிருப்பேன்" என்று தனக்குள் பலதடவைகள் ஒப்புக்கொண்டிருக்கிறாள்.

கபடமறியாத இளம்பெண்ணாக உணவு விடுதியொன்றில் பணிபுரிந்துகொண்டிருந்த ஹில்டரூணின் வயிற்றில் தன்னை உருவாக்கிவிட்டு, தன் இரண்டுநாள் காதலை முறித்துக்கொண்டு காணாமற்போய்விட்ட அந்த மனிதனை 27வருடங்களின்பின் தேடுகின்றேன் என்றால் அவளுக்கு ஆத்திரம் வருவது நியாயம்தானே!

ஆனால் தன் தாய் ஆத்திரப்படுவதில் இருக்குமளவு நியாயம்தான் அந்த மனிதனைத் தேடுவதிலும் இருக்கிறது என்றும் மாரித்துக்குத் தெரியும். ஆனால் 27வருடங்களாக அந்த மனிதனை நினைக்காத தான், இந்த இரண்டுமாதங்களில் சதா அவனையே நினைப்பதையும், அவனை அறிந்து கண்டுவிடவேண்டும் என்று துடிப்பதனையுந்தான் மாரித்தால் புரிந்துகொள்ள முடியவில்லை.

0 0 0

எப்போதும் குடித்துவிட்டு அம்மாவுடன் சண்டையிடும் அம்மாவின் கணவன், தன் அப்பா இல்லையென்பது மாரித்துக்கு ஆறுவயதிலிருந்தே தெரியும். அதன் பின்னரும் தன் தாயின் குடும்பப் பெயருடன் பள்ளிக்கூடம் போனாள், தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்குப் போனாள், இன்று தாதியாகக் கடமையாற்றுகிறாள். இந்த 27வருடகாலத்தில் தன்தாயை ஏமாற்றிய கயவனாக இந்தமனிதன் மாரித்தின் மனதில் எப்போதாவது தோன்றுவதுண்டு.

"பாவம் அம்மா!" என்று தாய்மீது ஏற்படும் இரக்கத்தில் இந்தமனிதன் மறைந்துபோவான். ஆனால் இப்போதுமட்டும் ஏன் இந்த மனசு எந்தவிதமான சமாதானத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் துடியாய்த் துடிக்கிறது?

"இப்போது இந்தமனிதனைக் கண்டுபிடித்து என்னசெய்யப் போகிறேன்?"

"இதுவரையில்லாத உறவை இப்போது ஏன் கொண்டாட பார்க்கிறேன்?"

மாரித்துக்குள் எழுந்த இக்கேள்விகள் அவளுக்கே முட்டாள்தனமானதாகத் தோன்றின.

"இந்தமனிதன் எப்படியிருப்பான்...? இப்போது மனைவி, பிள்ளைகளுடன் இருப்பானோ...? அல்லது... அவனைச் சந்தித்தால் என்ன பேசுவேன்...?"

"அதெல்லாம் ஒன்றும் எனக்குத் தெரியாது. ஆனால், அந்தமனிதனை நான் பார்க்கவேண்டும்... ஒரு தடவையாவது பார்க்கவேண்டும்... ஏனென்றால் அந்தமனிதன்... அந்தமனிதன்தான் என் தந்தை"

மாரித் முணுமுணுத்துக் கொண்டாள்.

"மாரித் கிரிஸ்ரியான்ஸன்!"

அந்தப் பெண்ணதிகாரி கதவைத் திறந்துவைத்திருந்தபடி இவளை அழைத்தாள்.

0 0 0

"என்னிடம் நல்ல செய்தியுமுண்டு; கெட்ட செய்தியுமுண்டு. எதை நான் ஆரம்பிப்பதை நீ விரும்புகிறாய்?"

அந்தப் பெண்ணதிகாரி நேரடியாக விடயத்துக்குத் தாவினாள்.

"தயவுசெய்து நல்ல செய்தியை முதலில் சொல்லுங்கள்"

ஏமாற்றந்தரும் பதில்களை அவளிடமிருந்து பலதடவைகள் கேட்டுக் கேட்டு மாரித் ஏற்கெனவே அலுத்துப்போயிருந்தாள்.

"இறுதியாக உங்கள் தந்தைபற்றிய தகவல்களை பெற்றுவிட்டோம்; என் வாழ்த்துக்கள்!"

"நீங்கள் பொய்சொல்லவில்லைத்தானே!"

மாரித் குதித்தபடி எழுந்தாள்.

"அதுமட்டுமல்ல, உங்கள் தந்தையின் சகோதரியின் முகவரியினைக்கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிர்ஸ்டவசமாக எங்களால் தெரிந்துகொள்ள முடிந்தது" என்றுசொல்லி அந்தப் பெண் அதிகாரி மௌனமானுள்.

மாரித்துக்கு ஏதோ ஒருமுலையில் என்னவோ நெருட மெதுவாகக் கதிரையில் அமர்ந்தாள்.

"சரி, இனி அந்த கெட்டசெய்தியைச் சொல்லுங்கள்!"

மாரித் மிகுந்த நிதானத்துடன் கேட்டாள்.

"அந்தக் கெட்டசெய்தி என்னவென்றால்... 18வருடங்களுக்குமுன்னுல் உங்கள் தந்தை இறந்துவிட்டார்"

0 0
0

கோதுமைவயல்களால் சூழப்பட்ட அந்தப் பழையவீட்டின் வாசற்கதவைத் தட்டியபோது வந்த அந்த வயதான பெண்மணியை ஏறஇறங்கப் பார்த்தாள் மாரித்.

"என் பெயர் மாரித் கிறிஸ்ரீயான்ஸன்"

"எனக்கு எல்லாம் தெரியும். அவர்கள் சொன்னுர்கள். உள்ளே வா பெண்ணே!"

அந்தப் பெண்ணின் குரல் தளதளத்துப் போயிருந்தது.

மாளிகைபோலிருந்த அந்த வீட்டில் அந்தப் பெண்ணைத்தவிர வேறுயாரும் இருக்கவில்லை. வரிசையாகச் சுவரில் மாட்டியிருந்த பல ஆண்களின் படங்களில் எந்தப் படம் அந்தமனிதனின் படம்... இல்லை, அவள் தந்தையின் படம்?

எப்படிப் பேசுவது என்று தெரியாமல் இருவரும் எதிரெதிரே அமர்ந்தனர். ஏற்கெனவே அந்தப் பெண்ணின் கண்கள் கலங்க ஆரம்பித்ததை மாரித் அவதானித்தாள். திடீரென அந்தப்பெண் எழுந்து சுவரின் நடுவில் மாட்டியிருந்த ஒரு பெரியபடத்தை கழற்றியெடுத்து மாரித்திடம் கொடுத்தாள்.

"எந்தவித பொறுப்புமில்லாமல் ஆடிப்பாடியபடி ஊர்ஊராய்த் திரிந்து ஒரு விபத்தில் இறந்துபோன என் ஒரேயொரு சகோதரன் ஈவார் ஓசன் இப்படியொரு உறவை விட்டுவிட்டுப் போவான் என்று கனவிலும் நினைச்சிருக்கேல்லை"

இப்போது அந்தப் பெண் பெரிதாக அழத் தொடங்கினுள்.

கட்டையாக வெட்டப்பட்ட முடியும், கூரிய மூக்குமாக, சிரித்தபடி கம்பீரமாக வீற்றிருந்த அந்த மனிதனை... தன் தந்தை ஈவார் ஓசனை வாழ்க்கையில் முதற்றடவையாகக் கண்டாள். மாரித்தும் அழுதாள்.

"மாரித் ஓசன்... என் இனிய மாரித் ஓசன்... கடவுள் ஒப்பற்ற கருணையுள்ளவர் பார்த்தாயா!"

அழுதபடி தன்னை அணைத்துக்கொண்ட அந்தப் பெண்ணை ஆரத் தழுவிக்கொண்டாள் மாரித்.

இப்போது அவள்மனது அவள்வசமாகி ஓய்ந்திருந்தது.

(இக்கதையில் வந்த பெயர்கள் யாவும் கற்பனையே)

அண்மையில் உருவாகிய சர்வதேசத் தமிழர் ஒன்றியம் "ஒலி" என்ற பெயரில் ஒரு சஞ்சிகையை வெளிவிடவுள்ளது. இந்த அமைப்பின் தலைவர் அன்ரன் சிங்கராயர் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்ருர். உலகத்தில் இலகுவான காரியம் ஒரு சஞ்சிகையை ஆரம்பிப்பதும், கடினமான காரியம் அதனைத் தொடர்ந்தும் நடாத்துவது என்று நினைக்கத் தோன்றுகின்றது. எங்கள் அனுபவம் அப்படி. ஆரம்பத்தில் அமர்க்களமாய் ஒலித்து பின்னர் படிப்படியாக மங்கி, மறைந்துபோய்விடாமல் தொடர்ந்து ஒலித்து சாதனைபுரிய சகோதர சஞ்சிகையான சுவடுகள் வாழ்த்துகின்றது.

"இலண்டன் ஒலி"

www.tamilarangam.net

# ஒரு கலைஞனின் சோகம்

வழக்கம்போல "எங்கட பெடியள்" அந்த விழாவில் "கசமுசத்து"க் கொண்டிருந்தனர்.

இசைநிகழ்ச்சி ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்படுகின்றது.

"கசமுசப்புகள்" அடங்கிப் போக...

மேடையில் தோன்றுகிருர் சுபாஸ் சந்திரன்!

"அடேய்! இந்தாள் இலங்கை ரி.வி.யில பாடுற ஆளல்லா"

"ஐயோ இந்தாளட்ட தலைநிறைய குட்டுவாங்கி நான் சங்கீதம் படிச்சனுன்ரா!"

"இந்தாளின்ர பாட்டைக் கேட்டிருக்கிறியா....மணியான குரல்!"

'எங்கட பெடியள்' குசுகுசுத்துக் கொள்கின்ருர்கள். சுபாஸ் சந்திரன் பாட ஆரம்பிக்கின்ருர்.

"மனமே உனக்கேன் இந்த வாட்டம்.."

கணீரென்ற குரல் அரங்கை ஆக்கிரமித்து, அங்கிருந்த அனைவரையும் மெய்மறக்கச் செய்கின்றது.

0 0 0 0

"தம்பி! நான் ஒரு சங்கீதக்காரனுக வரவேணுமெண்டதால சங்கீதத்தை முறையாகப் படிச்சவன். நான் பாடுறதும், என்ர பாட்டுகளை மற்றவையள் ரசிக்கிறதும், விமர்சிக்கிறதுந்தான் என்ர வாழ்க்கை. ஆனு இங்க (நோர்வேயில்) காசு, வேலை, பள்ளிக்கூடமெண்டு "ஓடிக்கொண்டேயிருக்கிற" எங்கட சனங்களோட நான் ஒரு கலைஞனுகவே வாழுறது முடியிற காரியமா?... அதால நானும் அவயளைப் போலவே வாழத் தொடங்கிட்டன். ஊரில ஒரு கலைஞனுகத்தான் சனங்களுக்கு என்னைத் தெரியும். அதால அங்க எனக்கு ஒரு கலைஞனுக்குரிய கௌரவம், மதிப்பு எல்லாமிருந்தது... எனக்கெண்டு ரசிகர்கள், எனக்கெண்டு விமர்சகர்கள்..., சங்கீதத்தை முறையாகப் படிச்சு அதைப்பற்றிப் பேசுற நண்பர்கள் எல்லாருமே அங்க இருந்திச்சினம். ஆனு இங்க... காலம எழும்பி படுக்கப்போறவரை கோப்பை கழுவி, நிலங் கழுவி...

எவ்வளவு இலட்சங்கள் உழைச்சாலும் என்னைப் பொறுத்தவரை நான் என்ர வாழ்க்கையை இங்க இழந்துபோனன்"

என்று சொல்லும் சங்கீதபூசணம் சுபாஸ் சந்திரன் நோர்வேவாழ் தமிழர்களுக்கு நன்கு தெரிந்த ஒருவர். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில்

1973ஆம் ஆண்டு சங்கீதபூசணம் பட்டத்தைப் பெற்ற சுபாஸ் சந்திரன் சில ஆண்டுகள் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றிவிட்டு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக 1980இல் கடமையேற்ருர். இங்கு அவர் கடமையாற்றிய காலத்தில் சுமார் 50இற்கும் மேற்பட்ட மெல்லிசைப் பாடல்களைப் பாடி, இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பிரபல்யமானுர். இறுக்கமான பாரம்பரிய சங்கீதத்தின் கட்டுக்களைத் தளர்த்தியவர்களாகக் கருதப்படும் எம்.ஏ.குலசீலநாதன், எஸ்.கே பரராஜசிங்கம் போன்ற கலைஞர்களுடன் சேர்ந்து மெல்லிசைத் துறையில் பல சாதனைகளைப் புரிந்துள்ளார். கண்ணன் - நேசம் இசையில் உருவான "ஒரு காவியம்... தமிழ் ஓவியம்", மோகன்ராஜ் - ரங்கன் இசையமைப்பில் ஈழத்து இரத்தினம் இயற்றி இவர் பாடிய "சோதனைகளால் வந்த வேதனைகள்" போன்ற ஈழத்துப் பாடல்கள் இவருக்குப் பெரும் புகழைத் தேடிக்கொடுத்த பாடல்களில் ஒருசிலவாகும். இங்கே கடமையாற்றிய

www.tamilarangam.net



காலத்தில் ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்திலும் பகுதிநேர நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணிபுரியும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. ரூபவாகினியில் பல தமிழ், இந்துசமய நிகழ்ச்சிகளில் இவர் பங்கேற்றுப் பாடியுள்ளார்.

புங்குடுதீவைச் சேர்ந்த, சங்கீதப் பிரியரான சண்முகம் பொன்னம்பலத்தின் கனிஸ்ட புதல்வரான சுபாஸ் சந்திரனின் சகோதரரான திரு. பொன் சுந்தரலிங்கமும் ஒரு நாடறிந்த சங்கீத வித்துவானுவார்.

சிங்களக் கலைஞர்களை ஊக்குவித்து இலங்கைவானொலி, தொலைக்காட்சியூடாக சிங்களத் தேசிய உணர்வை வளர்த்த அரசாங்கம், தமிழ்க் கலைஞர்களை மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் பராமரித்ததனுல், சிங்களக் கலை இலக்கியத்துக்கு வானொலி, தொலைக்காட்சி பங்காற்றிய அளவுக்கு தமிழ்க்கலை இலக்கியத்துக்கு வானொலி, தொலைக்காட்சியூடாகப் பெருமளவு பங்களிக்க முடியாமற் போய்விட்டது என்று வருத்தத்துடன் கூறும் திரு. சுபாஸ் சந்திரன் 1983ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தையடுத்து அங்கு பணிபுரிந்த தமிழ் ஊழியர்களைக் கட்டாய விடுமுறையில் அனுப்பியதைத் துயரத்துடன் நினைவுகூர்ந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்கள் நோர்வே அனுபவங்கள்பற்றிக் கூறுங்களேன் என்று கேட்டேன்.

"நான் நோர்வேயில சங்கீதபூசணம் சுபாஸ் சந்திரனல்ல. அகதி சுபாஸ் சந்திரன். இங்க வந்து கிட்டத்தட்ட இரண்டுவருடமாக, நான் ஒரு பாடகன் எண்ட விசயத்தையே மறந்துபோயிட்டன். சில நண்பர்களின்ர முயற்சியால 'சுவடுகள்' வெளியீட்டுவிழாவில முதன்முதலாக நோர்வேயில என்னை ஒரு கலைஞனாக அறிமுகப்படுத்திக் கொண்டன்.... இலங்கையிருந்து பேராசிரியர் கா.சிவத்தம்பி வந்திருந்தபோது 'ÅS' இல் ஒரு நண்பர் வீட்டில கிட்டத்தட்ட இருபது/ இருபத்தைந்து நோர்வீஜியர்களுக்காகப் பாடினன். என்னை ஒரு கறுப்பனாக, ஒரு அகதியாகப் பார்க்கிற நோர்வீஜியர்களைத்தான் கண்டிருக்கிறன். ஆனா அண்டைக்குத்தான் என்னை ஒரு மனிசனாக, ஒரு கலைஞனாகப் பார்க்கிற நோர்வீஜியர்களுக்கு அறிமுகமானன்... அதை என்னால எப்பவும் மறக்கமுடியாது... பிறகு அந்த நிகழ்ச்சியின் தொடராக சுவீடன் 'OPPSALA' பல்கலைக்கழகத்திலே ஏறத்தாள நாற்பது/ ஐம்பது கல்விமான்களுக்காகப் பாடினன்... இந்தமாதிரிச் சின்னச் சின்ன சந்தோசங்களோட திருப்தியடைய வேண்டியதுதான்" என்று சொன்ன சுபாஸ் சந்திரனிடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சுக் கிளம்பியது.

என்ன நினைத்தாரோ சற்றுநேரம் மௌனமாக இருந்தார்.

பின்னர் "எப்படியெல்லாம் கனவுகள் கண்டன்... இப்ப கோப்பை கழுவுறதே என்ர வாழ்க்கையாய்ப் போச்சு... எனக்கு நேரமாகுது... வேலைக்குப் போகவேணும் வரட்டா..." என்றவாறு எழுந்துகொண்டார்.

அந்தக் கலைஞனின் சோகத்தை என்னால் நன்கு புரிந்துகொள்ளக்கூடியதாகவிருந்தது. நானும் விடைபெற்றுக்கொண்டன்.

– மிஸ்டர் றிப்போட்டர் –

## சாதனைகள்?!

நீ
வாழ்க்கையிலே
எதனைச் சாதித்தாய்?

சகோதரிக்கு
இலட்சம் இலட்சமாய்
சீதனம் கொடுத்தேன்.
இரண்டு மாடி வீடு
சீதனமாய்ப் பெற்றேன்.
இதனை விட
எதனை நான் சாதிப்பது?

வேட்டொலி கேளாது
போராட்டத்தின்
தொடக்கமும் திசையுமறியாது
சுயநலங்களுக்காய்
குடும்பங்களுடன்
அந்நிய நாட்டில் வேரூன்றி
விழுதும் விட்டு
மண்ணில் மடியும் மைந்தர்க்காய்
முதலைக் கண்ணீர்விடும் பெரியோர்க்கே..
இவை மனப்பாடமானவை.

சமாதானம் வருமென்றால்
குலை நடுக்கம்
பிணம் நாலு விழுந்தால்
ஏகோபித்த கரகோசம்.

சுதந்திரத்தின் பெயரால்
வியாபாரம் புரியும்
இந்த
சூத்திரதாரிகள் ஒழியின்...
போராடி மரித்த
எமது அன்புத் தோழர்கள்
தம் ஆத்மாவின் சுதந்திரத்தை
ஆழமாக அனுபவிப்பர்.

யோகன்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாப்பரசர் விஜயமும் பழைய வரலாறும்

சுவடுகளுக்காக ALF VEGAR



யூன்மாதம் முதலாந் திகதி உலகக் கத்தோலிக்கர்களின் மதத்தலைவரான பாப்பரசர் இரண்டாவது அருளப்ப சின்னப்பர் நோர்வே நாட்டுக்கு வருகைதந்தார். மிகமிகக் குறைவான கத்தோலிக்கர்களைக் கொண்ட கிறீஸ்தவ (லூதர்) நாடான நோர்வேக்கு பாப்பரசர் வருவது இதுவே முதற்றடவையாகும்.

ஏறத்தாள 500ஆண்டுகளுக்கு முன்னர் நோர்வேகூட ஒரு கத்தோலிக்க நாடாகவே இருந்தது. ஜேர்மனியிலிருந்து மாட்டின் லூதரின் போதனைகள் டென்மார்க்கில்பரவி, டென்மார்க்கின் ஆட்சியின்கீழிருந்த நோர்வேயிலும் பரவத் தொடங்கிற்று. இக்காலத்தில் நோர்வேக்கும் டென்மார்க்குக்கும் அரசனுகவிருந்த 'முதலாம் பிரடரிக்' இறக்க டென்மார்க்கில் (1531 - 1534) உள்நாட்டு யுத்தம் வெடித்தது. முடியாட்சியை பெறுவதற்காகக் கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்தத்தினருக்குமிடையில் நடந்த யுத்தத்தின் விளைவாக டென்மார்க் நோர்வேயின் அரசமதமாக (லூதர்) கிறீஸ்தவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. டென்மார்க்கைப்போலல்லாது நோர்வேயில் கத்தோலிக்க மதத்தினர்க்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கத்தோலிக்கமதத்தைப் போதிப்பது தடைசெய்யப்பட்டது. கத்தோலிக்க தேவாலயங்கள் மூடப்பட்டன. அனைத்து தேவாலய உடைமைகளும் விற்கப்பட்டன. டென்மார்க் மொழியிலான வேதாகமம் அரசினுல் அங்கீகரிக்கப்பட்டது. நோர்வீஜியமொழி வழக்கிழந்து டெனிஸ்மொழி அரசகரும மொழியாகியது. இன்று இதெல்லாம் பழங்கதையாகி போனுலும் இன்றும் கிறீஸ்தவமதமே நோர்வேயின் அரசமதமாக இருக்கின்றது. பெருமளவில் (தென்னமெரிக்க, ஆசிய) வெளிநாட்டவர்களின் வருகையையடுத்து இங்கு தற்சமயம் கணிசமான கத்தோலிக்க மதத்தினர் வாழ்கின்றனர். பாப்பரசரின் வருகை இவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

www.tamilarangam.net

# வடமாகாண புற்றுநோய் சங்கம்

"இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் பெருமக்களின் மனமுவந்த நிதியுதவியால்; புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அல்லற்படும் எமது மக்களைப் பராமரிப்பதற்கு வறுத்தலைவிளான், தெல்லிப்பளையில் புற்றுநோயாளர் விடுதியொன்றைக் கட்டிமுடித்துள்ளோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.


30நோயாளர்கள் மட்டில் பராமரிக்கக் கூடிய இவ்விடுதி 1989ஆம் ஆண்டு தைமாதம் திறந்துவைக்கப் பட்டுள்ளது. இவ்விடுதியைச் சரிவரப் பராமரிப்பதற்கும், விடுதி ஊழியர்களின் ஊதியத்துக்கும், மருந்துவகை, ஆகாரவகை வாங்குவதற்கும் எங்களிடம் நிதிவசதி குறைவாக இருப்பதால், மீண்டும் பெருமக்களாகிய உங்கள் தயவை நாடி நிற்கிறோம்.

மனமுவந்து இப்புண்ணிய காரியத்துக்கு நிதியுதவி கொடுத்தருளும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்கின்றோம். வசதியுடையோர் விரும்பினல் வருடா வருடம் தங்கள் குடும்ப அங்கத்தவர் ஒருவரின் பிறந்த நாளன்றோ, அல்லது திவச தினத்திலன்றோ பொருளுதவி செய்யலாம். நிதியுதவியளிப்போர் காசோலைகளை "வடமாகாணப் புற்றுநோயாளர் சங்கம்" என்ற பெயரில் எழுதித் தலைவரின் முகவரிக்கு அனுப்பும்படி தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

பெருமக்களாகிய நீங்கள் இதற்குமுன் செய்த உதவிகளுக்கு மீண்டும் நன்றி தெரிவிப்பதோடு, தொடர்ந்தும் தங்கள் ஆதரவை (சிற்றுதவியாகவோ/ பேருதவியாகவோ) ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்"

இவ்வாறு வடமாகாண புற்றுநோய்ச் சங்கத் தலைவர் தாழ்மையான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முகவரி:-
டாக்டர்: மா. ஜெகநாதன்
( தலைவர் )
383, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.



## குறுக்கெழுத்துப் போட்டி

தவிர்க்கமுடியாத காரணத்தால் சென்ற இதழிலும் இவ்விதழிலும் குறுக்கெழுத்துப்போட்டியினைத் தொடரவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்வோம்.

ஆ.கு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காணி நிலம் வேண்டும்

விண்ணப்பம் ஏற்கப்பட்டு
அகதியென்று
விடை தேவை.

அகதியென்று ஆனபின்னல்
நல்லதோர் நகரசபை
என்னைப் பொறுப்பெடுத்தல்
வேண்டும்.

ஏற்ற நகரசபை
ஐந்தால் பெருக்குகையில்
'ஐம்பது' மிஞ்சுமாப்போல்
வேலையொன்று தரவேண்டும்.

வேலை நிரந்தரமாய்
ஆக்கிவிட்டு,
ஒஸ்லோவில்
வீடுவாங்குவதற்கும் வசதியெனில்
காரொன்றெடுப்பதற்கு
கடனுதவி செய்யவேண்டும்.

ஊரில் காணியோடும்
வீடு, கிணற்ருேடும்
இன்னொரு 'ஜெயப்ரதா'
அமைய வேண்டும்.

இவைகள் தருவாயோ?
'இல்லை'
என்று மறுப்பாயோ?

சொல்லு பராசக்தி!
சேர்த்த காசை
வீட்டுக் கனுப்பு முன்னம்.

- இளவாலை விஜயேந்திரன் -
(18.04.1989)



# எனது வாசகம்

துருப்பிடிப்பதை நான்
துடைக்கக் கண்டால்
ஆயுதம் செய்வதாய்
அச்சங் கொள்கிருர்கள்.

காற்றின் இசையை நான்
கவிதையாக்கினுல்
ஒற்றனுய் என்னை
உளவறிகின்ருர்கள்.

சுதந்திரம் பற்றி நான்
சற்று முணுமுணுத்தால்
துப்பாக்கிக் குழலால்
தலை சீவுகிருர்கள்.

சல்மன் ரஸ்டி,
உனக்கென்ன...
பொலிஸ் காவல்,
எனக்கு...?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய உணவுகளின் இன்சுவையை
அனுபவிக்க எம்மிடம் வாருங்கள்!

# PEACOCK

# RESTAURANT

TØYEN GATA 26

0578 OSLO 5

NORWAY

TLF: (02)191284 /689375

16.00 - 23.00 வரைக்கும் திறந்திருக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவிப்பு

அனைத்து நண்பர்களுக்கும்,

தொய்யன் தேவாலயக் கட்டடத் திருத்தவேலைகள் காரணமாக இதுவரைகாலமும் அங்கு இயங்கிவந்த தமிழ் - நோர்வே மக்கள் இணைவுகூடம் (TAMIL & NORSK KAFE) தற்போது 'TØYEN CENTER' இற்கருகில்(KJØLBERGGT 30) மாற்றப்பட்டுள்ளது. ஒஸ்லோ நகரசபைக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றை நாம் இந்த இணைவுகூடத்துக்காக ஒழுங்குசெய்து கொடுத்துள்ளோம். இந்தக் கட்டடத்துக்கான வாடகை மாதமொன்றுக்கு 4000 குரோணர்களாகும். இந்தப் பணத்தை செலுத்தும் பொறுப்பை இணைவுகூடத்தினரே ஏற்கவேண்டும்.

தேவாலய திருத்தப் பணிகள் முழுமைபெற கிட்டத்தட்ட ஒரு வருடம் செல்லலாம். திருத்தப் பணிகள் நிறைவுபெற்றதும் வழமைபோல இணைவுகூடம் தேவாலயத்தில் இயங்கும்.

இந்த வாடகைப்பணத்தைத் திரட்டுமுகமாக ஒகஸ்ட் 19ஆந் திகதி ஒரு கலாசார இரவை நடாத்த தமிழ், நோர்வே நண்பர்கள் உத்தேசித்துள்ளனர்.

இந்தத் தற்காலிக நடவடிக்கையால் இணைவுகூடத்துக்கும் தேவாலயத்துக்கும் இடையேயுள்ள தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன என்று யாரும் ஐயங்கொள்ளத் தேவையில்லை. எமக்கிடையேயான உறவுகள் தொடர்ந்தும் நெருக்கமாகவே இருக்கும்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
பிதா Stig

# நாற்சந்தி

மதிப்பிற்குரிய சுவடுகள் ஆசிரியர் குழுவுக்கு;

வணக்கம். தங்களது கடந்தமாத இதழ் என் கரங்களுக்குக் கிடைத்து வாசித்தபோது ஒரு பூரணமான நூலொன்றினைப் படித்த மனநிறைவு எனக்கு ஏற்பட்டது - மிக்க நன்றி. தங்கள் ஆக்கங்கள் நாளுக்குநாள் சிறப்படைவதை அவதானிக்கும்போது தமிழனது வரலாற்றுப்பாதைச் சுவட்டினை உலகுக்கு அறிவிக்கும் (குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு) ஓர் அரிச்சுவடாக உங்கள் "சுவடுகள்" திகழுமென்பதில் ஐயமெதுவுமில்லை.

மேலும் தங்கள் பணி சிறக்க எனது நல்வாழ்த்துகள்.

அன்புடன்
RANJAN
90A EALING ROAD
ALPERTON
WEMBLEY
MIDDX
U.K

www.tamilarangam.net



# ஒஸ்கார் பரிசுபெற்ற இரண்டு திரைப்படங்கள்.




ஒஸ்கார் பரிசுகளைப் பத்திரிகையாளர்கள்தான் தீர்மானிக்கின்ருர்களோ என்னவோ! ஒரு திரைப்படம் தயாராகும்போதும் அது திரையிடப்படும்போதும் ஆகா, ஓகோ என்று மேற்கத்தையப் பத்திரிகைகள் எழுதிஞல், அந்தப் படம் ஒஸ்கார் பரிசைப் பெறும் என்று எதிர்பார்க்கலாம். இந்தமுறை சிறந்த படமாகத் தெரிவுசெய்யப்பட்ட Rain Manஐப் பற்றி எழுதாத பத்திரிகைகள் இல்லை. அதில் நடித்து சிறந்த நடிகராகத் தெரிவான Dustin Hofman ஐப் பாராட்டியே பத்திரிகைகள் களைத்துப் போயின. அப்போதே சிறந்த படமாக Rain Man உம், சிறந்த நடிகராக Dustin Hoffmanனின் பெயரும் ஒஸ்கார் பரிசுக்குத்தெரிவாகுமென எல்லோரும் எதிர்பார்த்தனர். அந்த எதிர்பார்ப்புகள் வீண்போகவில்லைத்தான்.

கண்டிப்பு மிகுந்த தந்தையுடன் சண்டையிட்டுப் பிரிந்துபோன சார்லி (Charli), தந்தை இறந்த செய்திகேட்டு வேண்டாவெறுப்புடன் வீடு வருகின்ருன். வீடுவந்த அவனை அவன் தந்தையின் வழக்கறிஞர்கள் ஆச்சரியப்படுத்துகின்றனர். மூன்று மில்லியன் டாலர்கள் பெறுமதியான சொத்தினை தன் தந்தை ஒரேபிள்ளையான தனக்கு எழுதிவைக்காமல், ஒரு அஞதைகளைப் பராமரிக்கும் நிலையத்தின் பெயருக்கு எழுதிவைத்ததை அறிகின்ருன். ஆச்சரியமும் ஆத்திரமும் மேலோங்க இரகசியமாக வைக்கப்பட்டிருந்த அந்நிறுவனத்தின் பெயரை ஒருவாருக அறிந்து அங்கு சென்ற அவனுக்கு இன்னுமோர் அதிர்ச்சி காத்திருந்தது. அந்த விடுதியில் அவனுக்குப் பலவருடங்கள் முன்னதாகப் பிறந்த அவனது சொந்தச் சகோதரன் ரேமன்ட்(Raymand), Autistic என்னும் ஒரு வியாதியால் பாதிக்கப்பட்டு அங்கு வசித்துவருதலையும், அவன் பெயரில்தான் தந்தை அனைத்துச் சொத்துகளையும் எழுதிவைத்திருக்கிருர் என்றும் அறிந்துகொள்கின்ருன். Autistic என்பது ஒரு வித்தியாசமான வியாதி. இதஞல் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனவளர்ச்சியில்லை. அவர்களது நடவடிக்கைகள் குழந்தைத்தனமாக இருக்குமாம். இந்தப் படத்தின் கதாநாயகனும் அவ்வாறே. "அந்தப் பெண்ணின் முத்தம் எவ்வாறு இருந்தது?" என்று கேட்டால்,"ஈரமாக இருந்தது" என்று சொல்லும் குழந்தைத்தனம். அதேவேளை "இரண்டுவாரங்கள் எத்தனை நொடிகள்?" என்று கேட்டால் பட்டென்று சொல்லும் அபரீதமான சக்தி.


ஆரம்பத்தில் எப்படியாவது சொத்துக்களை அடையவேண்டுமென்ற எண்ணத்தில் ரேமன்டை ஏமாற்றிக் கூட்டிச்செல்லும் சார்லிக்கு ஆறுநாட்களாக இருபத்துநான்கு மணிநேரமும் அவனுடன் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அந்த நாட்களில் சார்லியையும் அறியாமல் அவன் சகோதரன்மீது பாசம் வளர்கின்றது. அதன் காரணமாக இதுவரைகாலம் தான் அறிந்திராத தன் சகோதரனைத் தானே பராமரிக்க முன்வருகின்ருன் சார்லி.

www.tamilarangam.net

ஆனுல், விடுதி அதிகாரிகளோ அவன் னமாற்றத்தை நம்பாமல், சொத்துக்களுக்காகவே சார்லி தன் கோதரனைத் தன்னுடன் வைத்திருக்க ிரும்புவதாகக் கருதி றேமன்டைச் சார்லியிடமிருந்து பிரித்துச் செல்கின்றனர். ன் தம்பியுடன்தான் இருப்பேன் என்று அடித்துக்கூறுமளவுக்கு அறிவுவளராத றேமன்டும் விடுதி அதிகாரிகளுடன் செல்கின்ருன். இதுதான் Rain Man இன் கதை.

(சார்லி சிறுகுழந்தையாக இருந்தபோது றேமன்டை Rain Man என்று அழைப்பாளும். அதுதான் படத்தின் பெயர் Rain Man!)

றேமன்டாக நடிக்கும் Dustin Hofman ஒரு பிறவி நடிகர். குழந்தைத்தனமாக நடிக்கும் அவரின் நடிப்புத் திறனைப் பத்திரிகைகள் அந்த அளவில் பாராட்டியதில் வியப்பேயில்லை. இப்பாத்திரத்தில் நடிக்க கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ஒத்திகைபார்த்தாராம். The Graduate என்ற படத்தில் பிரபலமாகிய Dustin Hoffman, Tootsie என்ற படத்தில் பெண்பாத்திரமேற்று நடித்து சாதனை படைத்தவர். இவரின் இன்னேர் படமான Cramer vs Cramer இவருக்கு ஒஸ்கார் பரிசை ஏற்கனவே பெற்றுக்கொடுத்திருந்தது. இவரின் தம்பி சார்லியாக நடிப்பவர் Tom Cruise. தற்போது பிரபலமான அமெரிக்க இளம்நடிகர்களில் ஒருவராவார். தனது பாத்திரத்தை இவரும் கச்சிதமாகச் செய்துள்ளார். ஆனுல் இந்தப் படம் சிறந்தபடமாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதை என்னுல் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நமக்கு மிகவும் பரீட்சயமான, சிறந்த படமாகத் தெரிவுசெய்யப்பட்ட Gandhi படத்தைப் பார்ப்போம். Gandhiஇல் காந்தியாக நடித்த Ben Kingsly ஐ மறந்துவிட்டும் படத்தைப் பார்க்கலாம். அந்தப் படத்தின் தயாரிப்பு, படம்சொல்லும் இந்திய வரலாறு, படம் காட்டும் அக்கால இந்திய சமூகம் என்று கதாநாயகனை மட்டும் நம்பியிராமல் அந்தப் படம் அமைந்திருந்தது. எனவே




அது சிறந்த படமாகத் தெரிவானது. ஆனுல், Rain Man முற்றிலும் கதாநாயகனுல் ஆளுமை செலுத்தப்பட்ட படம். கதாநாயகனைத் தவிர்த்து, படத்தைக் கணிப்பீடுசெய்தால் படத்தில் எதுவும் மிஞ்சாது. எனவேதான் அந்தப் படத்தை சிறந்த படமாகத் தெரிவுசெய்ததை என்னுல் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

சிறந்த நடிகையாகத் தெரிவுசெய்யப்பட்ட Judi Foster நடித்தபடம் The Accused. இது எல்லாவிதத்திலும் ஒரு 'அமெரிக்க'த் திரைப்படம். படம் முடியும்போது "அமெரிக்காவில் ஆறு நிமிடத்துக்கு ஒருதடவை பாலியல் பலாத்காரம் (rape) நடைபெறுகின்றதென்றும், அவ்வாறு வதைக்கப்பட்ட பெண்களில் 1/4பங்கினர் ஒன்றுக்குமேற்பட்ட ஆண்களால் வதைக்கப்பட்டுள்ளனர்" என்று எழுதிக் காட்டுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருத்திதான் இப்படத்தின் கதாநாயகி. படத்தின் முன்பாதியிலேயே அப்பெண்ணை வதைத்தவர்களுக்குத் தண்டனை கிடைத்துவிடுகின்றது. ஆனுல்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வதைத்தவர்களை மட்டுமல்ல, அவர்களைத் தூண்டியவர்களுக்கும், அவள் வதைக்கப்படும்போது கைதட்டி ஆரவாரம் செய்தவர்களுக்குமெதிராக அந்தப் பெண் ஒரு பெண் வழக்கறிஞர் துணையுடன்(Geli MgGill) நீதிகேட்டுப் போராடுவதையே படத்தின் பின்பகுதி சொல்கிறது. கடைறியாகப் பாலியல்ரீதியாகப் பெண்களை வதைப்பவர்கள் மட்டுமல்ல, அதற்குத் தூண்டுகோல்களாக இருப்பவர்க்குந் தண்டனையுண்டு என்று நீதிக்கதை சொல்லுமாப்போல் அவர்களுக்குத் தண்டனை வழங்கிப் படத்தை முடிக்கின்றனர். பலர் முன்னிலையில், பலரால், பகிரங்கமாக பாலியல்வதைக்குள்ளாகும் பெண்ணின் துயரத்தை, ஆத்திரத்தை, அவர்களைப் பழிவாங்கவேண்டுமென்ற ஆவேசத்தை Judi Foster என்னமாய்க் காட்டுகிறுர்!. சிறந்த நடிகையாக அவர் தெரிவுசெய்யப்பட்டமை சாலப் பொருத்தமே!.

ஆனுல், இரண்டு படங்களுமே அசாதாரணமான பாத்திரங்களையும் அசாதாரணமான (அமெரிக்காவில் சிலவேளை சாதாரணமாக இருக்குமோ?) கதையையும் கொண்டுள்ள படங்கள்தான். அன்றுட வாழ்க்கையைப் பிரதிபலிக்கும்



கதைகளாக இவை அமையாதது ஒரு குறைதான். ஆனுல் Rain Man மாதிரிப் படங்கள் ஒரு மாறுதலுக்காக என்றிருந்தால் நிட்சயமாக ஏற்றுக்கொள்ளலாம்.

- திரைப் பித்தன் -

# நான் நாஞக

நான்
அப்போது
பூமி உருண்டை என்பதைக்கூட அறிந்திருக்கவில்ல
ஆனுல்,
- பொம்பிளை சிரிச்சாப் போச்சு...
கல்லானுலும் கணவன்...
பெண்புத்தி பின்புத்தி
இவைகளை நன்கு அறிந்திருந்தேன்.

நான் நாஞக
என்றுமே வாழ்ந்ததில்லை.
அவர்களுக்காகவே
எப்பவும் வாழ்ந்தேன்.

அவர்கள்
எனக்காக
அதிக விலைகொடுத்து
ஒருவனை இறக்குமதி செய்தனர்
கழுத்தை நீட்டினேன்.
அப்புறம்...
அப்புறமென்ன,
விலைகொடுத்து விபச்சாரம்.
பத்து மாதத்தில்
தாய்மை மகுடம்
தவறியிருந்தால்
மலடி மகுடம்.

இப்பொழுது...
இப்பொழுதுமென்ன,
அவர்களுக்காகவே வாழ்கிறேன்.
எப்பொழுது
நான் நாஞக வாழ்வது?

- ரங்கா -

www.tamilarangam.net

**நான் யாராயிருந்தாலென்ன? யுகங்களினூடே அலையும் அகதி. மனிதனின் 'வரலாற்றில் எது மறைக்கப்பட்டுள்ளதோ அதை உலகறியச் செய்யும் தொழிலை அவ்வப்போது செய்து வருவேன்; கண்களை பிறர் தோண்டப் பறிகொடுத்தவன்; கைகளின் நகக்கண்களில் ஊசிகள் ஏற்றப்பட்டவன்; உடலெங்கும் எலெக்ட்றிக் ஷாக் பெற்றவன்; ஆணுறுப்புகள் சிதைக்கப்பட்டும், பெண்ணுறுப்புகள் குதறப்பட்டும், டாங்குகள் மீதேற்றப்பட்டு மங்கி மங்கி வாழ்பவன் ''.**

□

நவீன உலகம் வெடிவைத்துத் தகர்க்கப்படுவதற்குள் ஒரு குழந்தை. இன்னும் ஒரு குழந்தை, கருக்கொண்டு விட்டது. கருவும், மின்னணுவின் வாழ்வுபோல ஒளிர்ந்து மங்கிப் போவதற்குள் மனித வரலாற்றை உணர்ந்து விடத் தலைப்பட்டது. ஆனால், ஒ, யாரிடம் கேட்பது ?

கரு கேட்டது :

''நான் பிறந்துவிட்டால் ?''

''இந்தியாவில் பிறந்து விட்டாலே புரட்சியைக் கைவிட்டுவிடுவாய். சக மனிதனை வெறும் ஜடக்கூலியாகக் கருதுவாய். நாடி வந்த மனிதக் கூட்டத்தை ஓட ஓட விரட்டிக் கொல்வாய் !''

''துணைக்கண்டத்தில், இந்துமகா சமுத்திரத்தின் பரப்பில்தானே எனக்குப் பிறப்பு என்று விதிக்கப்பட்டுள்ளது ?''

''ஆமாம், கருவே ! பஃறுளியாறும், பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடும், அதிலுள்ள கபாடபுரம் என்னும் உன் மூதாதையர்களின் நகரமும் கொண்ட கொடுங்கடல் இது. மனித வரலாற்றின் யுகக்கற்களுடன் கரைந்துவிட்ட பயங்கரப் பிரதேசம் இது. இங்கே தான் உன் பிறப்பறுபட வேண்டும் என்றால் நான் என்ன தான் செய்ய முடியும்?''

'' நீ யார், சொல்லவில்லையே ?''

''நான் யாராயிருந்தாலென்ன ? யுகங்களினூடே அலையும் அகதி. மனிதனின் வரலாற்றில் எது மறைக்கப்பட்டுள்ளதோ அதை உலகறியச் செய்யும் தொழிலை அவ்வப்போது செய்து வருபவன் ; கண்களை பிறர் தோண்டப் பறிகொடுத்தவன் ; கைகளின் நகக்கண்களில் ஊசிகள் ஏற்றப்பட்டவன் ; உடலெங்கும் எலெக்ட்றிக் ஷாக் பெற்றவன் ; ஆணுறுப்புகள் சிதைக்கப்பட்டும், பெண்ணுறுப்புகள் குதறப்பட்டும் டாங்குகள் மீதேற்றப்பட்டும் மங்கி மங்கி வாழ்பவன்''.

''சித்திரவதைகளா ? உங்களுக்குப் பயமில்லையா ?''

''இருந்தது. உடனே சமூக வாழ்வைவிட்டு விலகினேன். காடு மேடுகளில் கைத்துவக்குகளுடனும், கிரனேடுகளுடனும் அலைந்தேன் ; சமயத்தில் ஆயுதங்களைத் துறந்து, கலைந்த தலையுடனும், நீண்ட தாடியுடனும் நண்பர்களுக்கே பயந்து அலைந்தேன்; பனிபெய்யும் மலைகள் நிறைந்த ஊசியிலைக்காடுகளிடையே டிக்கெட் மற்றும் விசா இல்லாமல் இரவுகளிலே ரயில் பயணம் செய்தேன். சில இடங்களில் தோண்டுவதற்கு முன்னமே சாம்பலுடன் எலும்புக் கூடுகளும் கிடந்தன. எடுத்துச் சாப்பிட்டேன். சுவையாகவே இருந்தன.''

''வேறென்ன செய்தாய் ?''

''மீண்டும் அலையச் சோர்வுற்றுப் படித்தேன். லண்டன் மியுசியத்தில் முப்பது ஆண்டுகள்; ஜூரிக் நகரத்தில் 1910-ஆம் ஆண்டு கலைஞர்களுடன், நாவலாசிரியர்களுடன் உறவாடினேன்; நவீனக்கலைஞன் கருவுறுதலைக் கண்டேன்; சைபீரியக்காடுகளில், லேபர் முகாம்களில் உழைத்தேன்; உலகின் மறுபுறம் தாடி வைத்த சக கொரில்லாக்களுடன் சேர்ந்து போர் புரியச் சென்றேன்...''

''பிறகெதற்கு இங்கு வந்தாய் ?''

''புத்தகங்கள். ஒரு லட்சம் புத்தகங்களை ஒரு சேர எரித்த மனித எலும்புகளைப் பார்க்கத் தலைப்பட்டு வந்தேன். சொன்னால் நம்ப மாட்டாய். ஒரு லட்சம் புத்தகங்களை ஒரு சேர எரித்தவர்கள் காலத்தையே எரித்தவர்கள்; வரலாற்றைப் போட்டு மிதித்தவர்கள்''.

□

# ஒருலட்சம் புத்தகங்களும் இரண்டு நாளிதழ்களும்

*நாகார்ஜுனன்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''இதற்கு முன்பு யாருமே இப்படிச் செய்ய வில்லையா ?''

''செய்திருக்கிறார்கள். என் மூதாதையர் களும், உன் மூதாதையர்களும் மனித வாழ்வின், வரலாற்றின் இரகசியங்களை மூடி மறைப்ப தாக நினைத்துக் கொண்டு இதைச் செய்துள் ளார்கள். 1938ல் வியன்னா நகரில் பல்லாயி ரக் கணக்கான புத்தகங்கள் எரிக்கப்பட்டன. எரித்தவர்கள் எட்டே ஆண்டுகளில் உலகைக் கலக்கிவிட்டு வீழ்ந்தனர்''.

''அப்புறம்?''

''விமானிகள் குண்டு வீசும் போதும், கெலி காப்டர்கள் தாழப்பறந்து ஊர் மக்களைச் சின்னா பின்னப் படுத்தியபோதும் சிவப்பு அட்டை போட்ட புத்தகங்கள் இருபதாண்டு களுக்கு முன்பு சிதறி வீழ்ந்தன. அங்கு ஒவ் வொரு வீடும் ஒரு நூலகம்தான். வரலாறே மனிதச் செயல்தான். அங்கும் குண்டு வீசிய வர்கள் எரிந்த சாம்பலின் வெம்மையைக் கூடப் பொறுக்க முடியாமல் ஓடினார்கள், தெரியுமா?''

''தெரியாது. ஒருலட்சம் புத்தகங்களின் சாம்பல் என்னவாயிற்று ?''

''கண்டந்தோறும் சிதறிக்கிடக்கும் கருஞ் செந்நிற மனிதர்களிடம் ஒட்டிக் கொண்டிருக் கிறது. ஒட்டிக் கொண்டிருப்பதைத் தட்டிவிடா மல் அவர்கள் வாழும் ஒவ்வொரு கணமும் சாம் பலின் வெம்மை தக்கவைக்கப் பட்டுள்ளது''.

''அப்படியா?''

''ஆம். ஆனாலும் சாம்பல் இந்துமகா சமுத்திரத்தின் பரப்பில், கரையிலிருந்து கரை மாற்றி ஓடும் பச்சை நிற கெலிகாப்டர்களில் ஏற்றப்பட்டுச் சிதறடிக்கப்படுவது எங்களுக்குத் தெரியாததல்ல. கரைசேர முடியாமல் நீந்திக் களைத்து குண்டுகளுக்கும் பலியான இளைஞர் கள் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள் - தாங் களும் சாம்பலையும், மனித எலும்பையும் ருசி பார்த்ததாக...''

''எல்லோரும் ருசி பார்த்துள்ளார்களா?''

''ஆம். செம்மண் சகதியில் சிலசமயங்களில் பச்சை சைத்தான்களால் தூக்கியெறியப்பட்டு மரத்தில் தொங்கவிட்ட உணவுப் பொட்டலங் களையும் நான் கண்டிருக்கிறேன். பன்னாடு களின் சிறைகளில் விதவிதமான மொழிகளி லுள்ள கெட்டவார்த்தைகளுக்கு நடுவே சுவரில் தீட்டியுள்ள மனித விந்துவின் நிறத்தையும் நான் ஊன்றிப் பார்க்கிறேன்.''

''எல்லாமே சாம்பல் நிறம்தானா?''

''ஆம்''.

''புரட்சி என்பது செந்நிறம்தான் என்று என்னிடம் சிலர் கூறியிருந்தார்களே?''

''பழைய கூற்றை நம்பாதே''.

''புத்தகச் சாம்பலுக்கு இவ்வளவு சக்தி யுண்டா ?''

''கருவே! புத்தகங்களை நீ கண்டதில்லை. வார்த்தைகளில் நீ கண் நிறுத்தியதில்லை, ஏன் உன் உடற்சாம்பலையே நீ இன்னும் உணர்ந்ததில்லை...''

''ஆம்! ஆனால் உணரத் துடிக்கிறேன்''.

''வரிகள், எழுத்துக்கள் வெறும் அர்த்த மல்ல. அவற்றின் பொருளல்ல. அவை வர லாறு எனும் சாம்பலின் மெய்ப்பொருள், நண்பனே !...

''பொறு, எனக்கு வெளியே வந்து உல கைப் பார்க்க வேண்டும்போல் இருக்கிறது. நானே பார்த்துத் தெரிந்து கொள்கிறேன்''.

''பொறுக்க வேண்டியது நீதான்! உலகம் உன்னதச் சாம்பலால் மட்டும் ஆனதல்ல. இதில் நீ பிறந்துவிட்டால் உன்னதங்களுக் காக வாழாமல் அற்ப லட்சியங்களுக்காக வாழ்ந்தே சாவது உறுதி. எனவே இப்போது பிறக்காமலிரு. இதுவே நீ செய்யும் ஒரே புரட்சி. பிறந்து விட்டாலோ சமரசவாதியாகி விடுவாய் !''

□ □ □

ஒரு லட்சம் தமிழ்ப் புத்தகங்கள் எரிந்து மறைந்த ஆறே ஆண்டுகளில் வரலாறு மீண் டும் எழுதப்படும் நாட்கள் யாரும் கேட்காம லேயே வந்தன. பொறுத்திருந்த கரு புரட்சி யாளனாயன்றி சமரசவாதியாய் வெளிவந்தது. ஆனால் யுகங்களினூடே அலையும் அகதியைக் காணோம். வேறொரு சாம்பல்படர்ந்த சமுத் திரப் பரப்புக்குப் போய்விட்டான் போலும்.

கரு வெளிவந்த காலை, நவீன உலகம் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது. தகர்க்கப் பட்டவற்றில் இரண்டு நாளேடு அலுவலகங் களும், அச்சு இயந்திரங்களும் அடங்கும். பற்றி எரிந்த நியுஸ்பிரிண்ட் சாம்பலாயிற்று. தொடர்ந்து எழுந்த குண்டுகளின் ஓசையை மறந்துவிட்டு கொலையாளர்கள், ஆசுவாசத் துடன் பத்திரிகைகளின் பத்திகளை கரண்டிகளையிட்டு நிரப்பிக் கொண்டிருந்தார் கள். பொய்களின் ஓசை துவங்கியது.

குண்டுகளின் ஓசையும் அடங்கவேயில்லை.

சாம்பல் இந்துமகா சமுத்திரப் பரப்பில் படர்ந்தது. சிதறி ஓடிய ஒவ்வொரு மனி தனும் யுகங்களினூடே அலையும் அகதி யானான். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்கன்டினேவிய நாடுகளிடையே மட்டும் அறிமுகமாயிருந்த நோர்வீஜிய நாடக ஆசிரியரான ஹென்றிக் இப்சனை(Henrik Ibsen) 1879இல் எழுதிய Et Dukke Hjem(ஒரு பொம்மை வீடு) என்ற நாடகமே அவரை ஒரு நாடகமேதையாக உலகிற்கு அறிமுகம் செய்தது. அவர் எழுதிய நாடகங்களுள் இந்த நாடகமே அவருக்குப் பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தது என்றும் குறிப்பிடலாம்.

இந்த நாடகத்தின் கதாநாயகிதான் 'நோரா'(Nora). இந்தப் பாத்திரந்தான் இந்த நாடகத்தின் பெரும் புகழுக்குக் காரணமாயிருந்தது. இந்த நோரா வெறும் நாடகப் பாத்திரமாக மேடையோடு பிரதிநிதியாக மேடையிலே அழுதாள் நோரா. அதனுல் இந்த "இப்சனின் நோரா(Ibsens Nora)" உலகறிந்த ஒரு பெண்பாத்திரமானுள். "மற்றவர்களுக்காக நான் வாழ்ந்ததுபோதும். இனி நான் எனக்காக வாழப்போகிறேன்" என்று சொல்லும் புதுமைப் பெண்ணுக இப்சன் அவளைப் படைத்தார். தன் கன்னத்தில் அறைந்ததாகக் கருதி "சமுதாயம்" கொதித்தெழுந்தது. இப்சன்மீது ஏராளமான எதிர்ப்புக் கணைகள் தொடுக்கப்பட்டன. ஆனுல் அந்த எதிர்ப்புகளே அந்நாடகம் பிரபலமாவதற்குக் காரணமாகவிருந்தன.

## இப்சன் கண்ட புதுமைப்பெண்

# நோரா

முடங்கிவிடாது பத்தொன்பதாம் நூற்ருண்டு ஐரோப்பிய சமூகத்தின் 'புதுமைப் பெண்ணுக'ப் பவனிவந்தாள். காலங்காலமாக ஆண்மேலாதிக்கத்தின் கீழிருந்த பெண்ணினத்தின் விலங்கை உடைத்தெறியும் ஒரு குறியீடாக ஹென்றிக் இப்சனுல் நோரா படைக்கப்பட்டாள். தந்தையாகவும் கணவனுகவும் தன்னை வதைக்கும் ஆண்மேலாதிக்க சமூகத்தை பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினுள் நோரா. "முதலில் பெற்றவர்கட்கும் பின் கணவனுக்கும் பிள்ளைகளுக்குமாக வாழ்ந்தேனேயன்றி எனக்காக நான் இதுவரை வாழவில்லையே" என பெண்ணினத்தின்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"என் எதிரிகள் தம் எதிர்ப்பின்மூலம் இந்நாடகம் பிரபலமாவதற்கு உதவியிருக்கிறார்கள்" என்று இப்சன் தன் நண்பரொருவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார். நோரா, நோராவின் கணவர் ஹெல்மர்(Helmer), நோராவின் பால்ய சினேகிதி திருமதி லிண்டா(Mrs.Linda), நோராவின் குடும்ப நண்பர் டாக்டர் ரங்க்(Doctor Rank), வழக்கறிஞர் குறாக்ஸ்ரட்(Krogstad) என்று ஐந்து பிரதான பாத்திரங்களுடனும் நோராவின் இரு குழந்தைகள், பணிப்பெண் என மூன்று துணைப் பாத்திரங்களுடனும் 'ஒரு பொம்மை வீடு' உருவாக்கப்பட்டது.

முரட்டுத்தனமான பழமைவாதியான கணவர் ஹெல்மரின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப தன்னை மாற்றிக்கொண்டு கீழ்ப்பணிவும், விசுவாசமும் கொண்ட மனைவியாகவும், பாசம்மிக்க தாயாகவும் வாழ்கிறாள் நோரா. கணவனும் குழந்தைகளுந்தான் அவளது உலகம். இவள்மீது அனுதாபம் கலந்த நேசம் கொண்டவரும் குடும்ப நண்பருமான முதியவர் டொக்டர் ரங்க்கும் இவளின் பால்ய(விதவைச்) சினேகிதி திருமதி லிண்டாவும் இவளது நம்பிக்கைக்குரிய நண்பர்கள். இறக்குந் தறுவாயிலிருந்த கணவனைக் காப்பாற்ற, கடன்வாங்குவதிலும்விட இறப்பதே மேலென்று கருதும் கணவனுக்குத் தெரியாமல் அவள் வாங்கிய கடன்தான் அவள் வாழ்க்கையிலே புயலைக் கிளப்புகின்றது. அவளுக்குக் கடனுகப் பணத்தைக் கொடுத்த வழக்கறிஞர் குறாக்ஸ்ராட், கணவனைக் காப்பாற்றிவிட வேண்டுமென்ற ஆர்வத்தில் சட்டரீதியான சிக்கல்களை கருத்திற்கொள்ளாமல் தன் தந்தையின் கையொப்பத்தையிட்டு அவள் கடனுகப் பெற்றுக்கொண்டதை அறிந்துகொண்டதும் ஹெல்மருடன் ஏற்பட்ட தகராறு ஒன்றிற்கு பழிதீர்க்கும்பொருட்டு நோராவைப் பயமுறுத்த (black mail), நோராவின் வாழ்க்கை தடுமாற ஆரம்பிக்கின்றது. இறுதியில் அந்த இரகசியம் ஹெல்மருக்குத் தெரியவரும்போது தனக்காக வாழ்ந்த தன் மனைவி தன் உயிரைக்காப்பாற்றவே போலிக் கையொப்பமிட்டு கடன்வாங்கினாள் என்பதை அறிந்திருந்தும் சற்றும் இரக்கமில்லாமல் அவளை உதறியெறியும் கணவனின் ஈனத்தனத்துக்கு எதிராக கொதித்தெழும் நோரா 19ஆம் நூற்றாண்டு நோர்வீஜிய சமூகத்துக்கு ஒரு புதிய பாத்திரம். தன் கௌரவம் பாதிக்கப்பட்டுவிடுமென்று அவளை உதறியெறிந்த ஹெல்மர், மனம்மாறிய குறாக்ஸ்ராட் நோராவின் கடன்பத்திரத்தைத் திருப்பிக்கொடுத்ததும் இனி ஆபத்து இல்லையென்று தெரிந்ததும் நோராவை "மன்னிப்பதாக"க் கூறி மீண்டும் தன் வலையில்வீழ்த்த முனையும்போது சீறியெழுகிறாள் நோரா. "உன் உண்மையான சொரூபத்தை நான் கண்டுகொண்டேன். இனி உன்னுடன் வாழ என்னால் முடியாது" என்று கூறியவாறு நோரா வீட்டைவிட்டு வெளியேற முயலும்போது ஹெல்மர் அதிர்ச்சியடைகின்றான்.

கணவன், குடும்பம், பிள்ளைகள் என்ற வார்த்தைகளைக்கூறி நோராவை மீண்டும் தன் பொம்மையாக்க ஹெல்மர் கையாண்ட அனைத்துத் தந்திரங்களையும் முறியடித்துவிட்டு "இனியும் நான் உன் பொம்மையாக இந்தப் பொம்மைவீட்டில் வாழமாட்டேன்" என்று கூறியவாறு வீட்டைவிட்டு வெளியேறுகின்றாள்.

வலுவான கதையும், பாத்திரங்களும் நாடகத்தில் இருந்தமையால் மொத்தம் மூன்று காட்சிகளுள்(act) நாடகம் அமைக்கப்பட்டிருந்தது. 1879ஆம் ஆண்டு டிசம்பர்மாதம் இந்நாடகப் பிரதி பிரசுரமாகியது. பிரசுரமாகி மூன்றாவது வாரத்தில் கொப்பன்ஹாவன் றோயல் தியேட்டர்(Copenhagen Royal theatre)நிறுவனத்தால் நாடகமாகத் தயாரிக்கப்பட்டது. இப்சனே எதிர்பாராத வேகத்தில் ஸ்கன்டினேவிய நாடுகளிலும் ஏனைய ஐரோப்பியநாடுகளிலும் இந்நாடகம் மிகவும் பிரபலமடைந்தது. ஐரோப்பா எங்கும் "இப்சனின் நோரா" பேசப்பட்டாள், விமர்சிக்கப்பட்டாள், பாராட்டப்பட்டாள், கடுமையான கண்டனத்துக்கும் உள்ளானாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1880இல் இந்நாடகம் ஜேர்மனியில் மேடையேற்றப்பட்டபோது இப்சனுக்கு ஒரு பெரும் நெருக்கடியேற்பட்டது. "எல்லாம் சரி ஆனால் நோரா வீட்டைவிட்டு வெளியேறுவதாகமட்டும் முடிவு அமையக்கூடாது" என்று ஜேர்மன் நாடக நிறுவனத்தினர் முடிவாகக் கூறிவிட்டனர். இப்சன் நாடகத்தின் முடிவை மாற்ருதபட்சத்தில் தாங்களே நாடகத்தில் மாற்றத்தைச் செய்வதாகப் பயமுறுத்தினர். அக்கால ஐரோப்பிய சமூகத்தினரைப் புரிந்துகொள்ள இந்தச் சம்பவம் நல்லதொரு உதாரணமாகும். வேறுவழியில்லாமல் போகவே மிகுந்த கோபத்துடனும் கவலையுடனும் நாடகத்தின் முடிவைமாற்ற இப்சன் சம்மதித்தார். அந்த முடிவின்படி நோரா வீட்டைவிட்டு வெளியேறும் சமயத்தில் ஹெல்மர் அவளை வற்புறுத்தி குழந்தைகள் படுத்திருந்த இடத்துக்கு அழைத்துச்சென்று குழந்தைகளைக் காட்டி "இப்போது ஆனந்தமாய் உறங்கும் இக்குழந்தைகள் நாளை விடியும்போது தாயில்லாக் குழந்தைகளாகிவிடுவார்களே! இதற்கு நீ சம்மதமா?" என்றுகேட்க நோரா மனம்மாறி தன்முடிவை மாற்றிக்கொள்கின்ருள். உண்மையில் நாடகத்தின் முடிவுதான் "இப்சனின் நோராவையும்", அவளின் "பொம்மை வீட்டையும்" உலகத்துக்குக் காட்டியது. ஆனால் அந்த முடிவை மாற்றவேண்டிய நிர்ப்பந்தங் குறித்து "எனது நாடகத்துக்கெதிரான காட்டுமிராண்டித்தனமான செயல்" என்று வருத்தத்துடன் குறிப்பிட்டார் இப்சன். ஆனால் அடுத்த தடவை இத்தாலியில் மேடையேற்றியபோதும், அதன் பின்னரும் நாடகத்தின் பழைய முடிவையே பயன்படுத்தினுர்.




ஆங்கிலத்தில் இந்நாடகம் **A Doll's House** என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டது. **Henry Arthur Jone** என்ற ஆங்கில நாடக ஆசிரியர் "இப்சனின் நோராவை" மனதில் வைத்து **The Breaking Of a Butterfly** என்ற நாடகத்தை எழுதினுர். வெகுவிரைவில் ஜேர்மன், பின்னிஸ், போலந்து, ருசிய, இத்தாலிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு இந்நாடகம் உலகின் பலநாடுகளில் மேடையேற்றப்பட்டது.

---

<u>ஜப்பான்</u>

எரிவாயுவைப் பயன்படுத்தி மிக அதிவேகத்தில் மணிக்கு 100மைல் வேகத்தில் அதிக சரக்குடன் செல்லக்கூடிய கப்பலொன்றை ஜப்பான் வேகமாகத் தயாரித்துவருகின்றது. டோக்கியோவிலிருந்து அமெரிக்காவை அடைய இக்கப்பல் மூன்றுதினங்களே எடுக்குமாம் (தற்போது 10தினங்கள்). 1994இல்தான் இக்கப்பல் போக்குவரத்தில் ஈடுபடும். அதுவரை கப்பலை உறுதிப்படுத்தி சிறந்த தரமுடையதாக்கும் பணியில் ஜப்பானிய கப்பல் கம்பனி ஈடுபட்டுவருகின்றது.

<u>பங்களாதேஸ்</u>

பங்களாதேசின் சனத்தொகை 119,14 000 ஆகும். வருடாவருடம் 2 1/2% சனத்தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது. இதனை 1990ஆம் ஆண்டளவில் 1 1/2%ஆகக் குறைக்க அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது. அதன் ஒரு கட்டமாக ஜனவரி 2ஆந் திகதியை மக்கள்தொகை தினமாக (populationday)

www.tamilarangam.net

# For quality Asian foods

ஆசிய உணவுப் பொருட்கள்

வாசனைத் திரவியங்கள்

ஏனைய நோர்வேஜிய உணவுப் பொருட்கள்

## Deta Lavpris

## IGBAL BROTHERS

NORBYGATA 54, 0190 OSLO.1.

Tlf. (02) 19 8

Tlf. priv. (02) 67 17 56 - 2



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓ.....

தந்தூாி கோழிக்கறியின்

தரமான சுவை !

# Chandan's

## TANDOORI INDISK RESTAURANT

Storgata 22 (Dovrehallen), 0184 OSLO 1 - Tlf.: (02) 17 07 73 -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உன்னையே நீ அறிவாய்

பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்தின் இரண்டாவது ஆண்டு மலரான "உன்னையே நீ அறிவாய்!" கிடைக்கப் பெற்றோம். இந்த நிலையம் வியக்கத்தக்க வகையில் பல நற்பணிகளை பிரான்ஸ் வாழ் தமிழருக்கு ஆற்றிவருகிறது. பிரஞ்சு மொழி உட்பட பல்வேறு பட்ட மொழிகளில் கல்வி கற்பிப்பது இந்நிலையத்தின் பிரதான பணி. தமிழ்க் குழந்தைகள் தாய்மொழியை மறந்து விடக்கூடாது என்ற நோக்கத்துடன் அவர்களுக்கென தமிழ் மொழி வகுப்பனை நடாத்தும் இந் நிலையத்தின் சேவை பெருமைப் படத்தக்கதொன்றல்லவா!

இந்நிலையத்தின் ஆண்டு மலரில் எஸ். அகஸ்தியரின் கலை, இலக்கியம், அரசியல் - ஒரு பார்வை என்று ஒரு அற்புதமான கட்டுரை இடம் பெறுகிறது. விளம்பரங்கள் தவிர பிரான்சில் வாழும் தமிழர்களின் வாழ்வு பற்றி அறிந்து கொள்ளும் வகையில் விடயங்களெதுவும் இடம் பெறாமை ஒரு முக்கிய குறைபாடெனினும், இம்மலரை வெளிக்கொணர்ந்த அவர்களின் சாதனையுடன் ஒப்பிடுகையில் குறைபாடுகள் தெரியவில்லை.

மறைந்த பேராசிரியர் சு.வித்தியானந்தனின் ஞாபகார்த்தமாக சிறுகதை கவிதைப் போட்டிகளை ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்காக எதிர்வரும் ஆகஸ்ட்மாதத்தில் நடாத்தவுள்ளனர்.

மேன்மேலும் இவர்கள் பணிதொடர வாழ்த்துகின்றோம்.

தொடர்புகளுக்கு:-

"Centre Parisien D' Education Pour Les Tamouls"
108 Rue Blomet
75015 Paris

உங்களுக்குத்
தேவையான சகல புதிய,
பழைய பாடல்கள்
கொண்ட
AUDIO CASSETE - 27Kr.
DISK
ஆகியவற்றைப்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
செல்வன்
தொலைபேசி இல. 357586



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆயிரம் பூக்கள் மலரட்டும்



## புலிகள் - அரச பேச்சுவார்த்தைகள் தீர்வுக்கு வழிசமைக்குமா?



சாத்தியமில்லை என நாம் அடித்துக் கூறும் விடயங்கள் சிலவேளைகளில் சாத்தியமாகி நமது கணிப்பீடுகளின் தற்காலிகத்தன்மைகளை நிரூபிக்கின்றன. ஒரு வருடத்துக்கு முன் யார் எதிர்பார்த்தார் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே பேச்சுவார்த்தை இடம்பெறுமென? இப்போது நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் அரசியல் பின்னணியை சென்ற இதழில் பாரதியின் கட்டுரை விளக்கமுற்பட்டுள்ளது. இந்திய வல்லரசின் திட்டங்களையும் கணிப்பீடுகளையும் விடுதலைப்புலிகள் - இலங்கை அரசு பேச்சுவார்த்தைகள் பொய்யாக்கி அந்த வல்லரசுக்கு ஒரு பெருந்தலையிடியை கொடுத்துள்ளன. இந்தியா இந்நிலைமையை முற்ருக எதிர்பார்த்திருக்கவில்லை. ஆயினும் தனது இராட்சத பலத்தால் நிலைமையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும் என்ற நிலைப்பாட்டிலிருந்து இந்தியா விலகியுள்ளதாகத் தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை மீது இந்திய மேலாதிக்கம் மேலும் இறுகுமா, அது என்ன தந்திரங்களைக் கையாளும் என்பதை இலங்கையின் இன்றைய உள்ளார்ந்த நிலைமைகளே பெருமளவில் நிர்ணயிக்கும். இந்தியாவின் இராணுவரீதியான மேலாதிக்கம் அகற்றப்பட சில முன்னிலைமைகள் உருவாகவேண்டும். முதலாவது, இன்று நடைபெறும் பேச்சுவார்த்தைகள் ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வுக்கு வழிவகுக்க வேண்டும். விடுதலைப்புலிகள், EROS போன்ற அமைப்புக்கள் வெகுஜன அரசியலில் பங்கு பற்றி தமிழ்ப் பிரதேசங்களின் ஜனநாயகரீதியான புனர்நிர்மாணத்தையும் அபிவிருத்தியையும் முன்னெடுத்துச் செல்லும் நிலையை உருவாக்க வேண்டும்.

இன்றைய மாகாண ஆட்சி அமைப்பு தமிழ் பிரதேசங்களினதும், அங்கு வாழும் முஸ்லிம் மக்களினதும் சுயாதீனம் பற்றி பல கேள்விகளை எழுப்பியுள்ளது. மாகாண சபைக்கு இன்னும் நியாயமான சுயாதிகாரம் மத்திய அரசினால் வழங்கப்படவில்லை. இப்போ நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப்புலிகளால் இதுவரை நடைமுறையில் கிடையாத சுயாட்சி உரிமையைப் பெற முடிந்தால்

அதுமட்டுமே ஒரு முக்கிய வெற்றியாகக் கருதப்படலாம். அதேநேரத்தில் புலிகளுக்கும் தமிழ்மக்களுக்கும் இத்தகைய வெற்றிகிடைப்பதை சிங்கள இனவாத அமைப்புகள் ஏற்றுக்கொள்ளுமா என்ற கேள்வியையும் எதிர்நோக்க வேண்டும். இலங்கையரசு, சிங்கள இனவாத சக்திகளை பூரணமாகக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெருமை இந்திய வல்லரசுக்குச் சாதகமாகவே அமைந்துள்ளது.

இன்று தென்னிலங்கையில் முக்கிய அரசியல் கட்சிகளான UNPயும் சுதந்திரக் கட்சியும் JVPயின் இனவாதத்தை தமது இனவாதத்தால் எதிர்க்கின்றனவேயொழிய, ஒரு புதிய பரந்த தேசிய சுதந்திரத்தை முன்வைக்கவில்லை. பிரேமதாச ஒரு "புதிய" UNPஐ உருவாக்குகிறார். இதற்கு அவர் பழைய தேசியவாதத்தையே பயன்படுத்துகின்றார். இந்தியப்படை வெளியேறவேண்டுமென்பது JVPயின் கோரிக்கை. ஆனால், தமிழ்மக்களுக்கு எதுவித உரிமைகளையும் வழங்கக்கூடாது என்பதும் JVPயின் கோரிக்கை. இந்தியப்படை வெளியேறவேண்டுமென்பது தமிழ்மக்கள் மத்தியில் வளர்ந்துவரும் கோரிக்கை. ஆனால், அந்தப்படைக்கு பதிலாக மீண்டும் சிங்கள இராணுவம் வரக்கூடாது என்பதும் தமிழ்மக்களின் கோரிக்கை.

இந்திய இராணுவம் வெளியேறவேண்டுமென்பது இருசார்புக்கும் பொதுவானது. தமிழ்ப்பிரதேசங்களின் பூரண சுயாட்சிக்கொள்கை இருசார்புக்கும் பொதுவாகாதவரை இந்த மரணவிலங்கிலிருந்து நாம் வெளியேறமுடியாது. இங்குதான் விடுதலைப்புலிகளின் இன்றைய அரசியல் தந்திரம் முக்கியமடைகின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு அரசியல் தீர்வென்றே கொண்டுவரப்பட்டது. ஆனால் சென்ற இரண்டு வருடங்களாக இந்த ஒப்பந்தத்தின் விளைவாக தமிழ்ப்பகுதிகள் பயங்கரமாக இராணுவமயப்படுத்தப்பட்டன. இன்றைய மாகாணசபையின் அரசியலதிகாரம் இந்திய இராணுவத்தின் துப்பாக்கிக்குளாயூடே பிறக்கின்றது போலுள்ளது. இந்த நிலையை மாற்ற புலிகள் - இலங்கையரசு பேச்சுவார்த்தைகள் வழிசமைக்குமா? இலங்கையரசால் சிங்கள இனவாதிகளின் பயங்கரவாதத்தை ஒழிக்கமுடியுமா? இதுவே மக்கள்மத்தியில் எழும் கேள்விகளாகும்.

ந. சண்முகரத்தினம்
Norges landbrukshøgskole
Ås



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொடர்ந்த சுவடுகள்

21.05.1989

•

ஆவரங்கால் பகுதியில் இந்தியப்படைகளின் தேடுதலின்போது கைதுசெய்யப்பட்ட பலரில் இருவர் சடலமாக பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

•

பீக்கிங்கில் இராணுவச்சட்டம் அமுலாகியது.

•

கனகராயன் குளத்தில் கண்ணிவெடியினால் இந்திய இராணுவத்தினர் நால்வர் உயிரிழந்தனர்.

•

சம்மாந்துறையில் தமிழ்- முஸ்லீம் கலவரத்தைத் தூண்டியதாக கூறப்படும் இரண்டு சிவில் உடையணிந்த பொலிசாரை இந்திய இராணுவம் கைதுசெய்தது.

22.05.1989.

•

மூன்றுமாதம் தொடர்ந்து பாராளுமன்றம் செல்லாத ஈரோஸ் எம்.பீக்கள் பதின்மூவரும் யூன் 9ஆந் திகதியுடன் பதவியிழப்பர் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

•

கிழக்கில் தமிழ், முஸ்லிம் ஐக்கியத்தைத் தடுக்க சதிநடப்பதாக மாகாணசபை அமைச்சர் அபூசுசப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

•

வட- கிழக்கில் இந்திய இராணுவம் பல புதிய முகாம்களை அமைத்து இராணுவ நடவடிக்கையினைத் தீவிரப்படுத்தியுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

•

தமிழ்- முஸ்லிம் கலவரங்களையடுத்து கல்முனை, சம்மாந்துறைப் பகுதிகளில் இரவு பகல் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டது.

•

சம்மாந்துறை சம்பவங்களுக்கு வெளியாரே காரணம் என அஸ்வர் எம்.பி. கூறியுள்ளார்.

•

ஏருவூரில் கண்ணிவெடியினால் நான்கு இந்திய இராணுவத்தினர் பலியாகினர்.

•

கல்முனை, சம்மாந்துறையில் ஊரடங்குச் சட்டம் 6ஆவது நாளாக நீடிப்பு.

•

புலிகள் தங்களைத் தாக்கியதன் நோக்கம் தெரியவில்லை என்று புளொட் அறிக்கைவிட்டுள்ளது.

•

புத்தூரில் இந்தியப் படைகளால் கைதுசெய்யப்பட்ட 19வயது இளைஞர் சடலமாக ஒப்படைக்கப்பட்டார்.

•

ஊர்காவற் படையினரை அகற்றக் கோரி 34தோட்டங்களில் 15000 ஊழியர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்தனர்.

•

ஈரோஸ் உறுப்பினர் குகதாஸ் கோரமான முறையில் கொல்லப்பட்டதையடுத்து ஈரோஸ் தனது கவலையினையும் ஆத்திரத்தையும் தெரிவித்துள்ளது.

25.05.1989.

கிழக்கு மாகாணப் பிரச்சனைகள் குறித்து முதல்வர் வரதராஜப் பெருமாள் ஜனாதிபதியுடன் பேசினர்.



•

முஸ்லிம்களைப் பாதுகாக்க இந்தியப்படை நினைத்தால் போராளிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எச்.எம்.அஸ்ரஃ தெரிவித்தார்.

•

தனியான தமிழ் ஒளிபரப்பை நடத்தவேண்டுமென தொண்டமான் ஜனாதிபதியைக் கோரவிருக்கிறார்.

•

சம்மாந்துறையில் ஊரடங்கு தளர்வு.

23.05.1989.

மன்னாரில் புலி - புளொட் இயக்கமோதலில் மொத்தம் 51பேர் பலி. இதில் 40பேர் புளொட் உறுப்பினர்களென்று தெரிவிக்கப்பட்டது.

•

முதல்வர் வரதராஜப் பெருமாள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுகின்றார்.

•

நவிண்டிலில் இரண்டு வீடுகளை இந்திய இராணுவம் குண்டுவைத்துத் தகர்த்துள்ளது.

•

இந்தளவு உரிமைகளைத் தமிழர்கள் பெற இந்தியத் தலையீடுதான் காரணம் எனத் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

•

கல்முனை, சம்மாந்துறைப் பகுதியில் தொடர்ந்து அமுலிலிருக்கும் ஊரடங்குச் சட்டத்தால் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

•

நெடுங்கேணியில் இந்தியப் படை நடாத்திய செல் தாக்குதலில் இருவர் பலி, 6பேர் காயம்.

26.05.1989

•

தமிழ்த் தீவிரவாதிகளதும் முஸ்லீம்களதும் ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

•

மட்டுநகர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் உறவினர்களைப் பார்வையிட இந்திய இராணுவம் தடைவிதித்துள்ளது.

*

கடத்தப்பட்ட மாகாணசபை உறுப்பினர் சிவபாலராஜா இன்னமும் விடுதலைசெய்யப்படவில்லை.

•

மதிய உணவுக்குப் பதிலாக பெற்றோர்க்குப் பணம் வழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

SHYAM TEKWANI




27.05.1989

•

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் காலம் நெருங்கிவிட்டதென சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

•

'சதிகளுக்கு இரையாகி மோதலை வளர்க்கவேண்டாம்' என்று ஈரோஸ் கிழக்குமாகாண மக்களைக் கேட்டுள்ளது.

•

மாகாணசபைக்கு அதிகாரம் வழங்க மறுத்தால் போராட்டந் தொடரும் என்று யாழ் மாவட்ட எம்.பி. பிரேமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

28.05.1989

•

மாகாணசபைச் சட்டமூலம் 134வாக்குகளால் நிறைவேறியது.

•

31.09.1989

*

கடத்தப்பட்ட மாகாணசபை உறுப்பினர் சிவபாலராஜாவைப் புலிகளே கடத்தியுள்ளனர் என்று ENDLFஇனர் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

•

எதிர்கால சமரசப் பேச்சுவார்த்தைக்கு உறுதியான இணக்கங் காணப்பட்டது என்று அரசு - புலிகள் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

•

அனைத்தியக்க மாநாடொன்றுக்கு EPRLFஉம் வரவேற்புத் தெரிவித்துள்ளது.

•

அக்கரைப்பற்றில் ஐவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட பதட்டம் காரணமாக எல்லைப்பகுதிகளில் இந்தியப்படைகள் முகாமிட்டன.

•

கடத்தப்பட்ட மாகாணசபை உறுப்பினர் சிவபாலராஜாவை விடுதலை செய்யுமாறு மாவட்டசபை மந்திரிகள் விடுதலைப் புலிகளைக் கோரியுள்ளனர்.

01.06.1989

•

"கார்ட்"மாரின் வேலைநிறுத்தங் காரணமாக இலங்கையெங்கும் இரயில்சேவை நிறுத்தப்பட்டது.

•

கல்முனைப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

•

சம்மாந்துறை, கல்முனைப் பகுதிகளுக்கு இலங்கை இராணுவத்தை அழைக்கும் முயற்சிக்கு TELO எம்.பி.க்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

•

வட - கிழக்கிலுள்ள பிரதான தொழிற்சாலைகளான காகிதத் தொழிற்சாலை, இல்மனைட் தொழிற்சாலை என்பன மத்திய அரசின்கீழ்த் தொடர்ந்தும் இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

•

இரத்தினபுரியில் வெள்ளங் காரணமாக பத்தாயிரம்பேர் பொது இடங்களில் தஞ்சங் கோரியுள்ளனர்.

•

கிழக்கில் அதிரடிப்படை முகாம்கள் புனரமைக்கப்படுகின்றன.

•

சம்மாந்துறை மாவட்டத் தமிழரின் பாதுகாப்புக் குறித்து இந்திய இராணுவத் தளபதி மாநாடு ஒன்றினைக் கூட்டினர்.

•

பாதுகாப்பு ஊழியர்களின் "திடீர் லீவுப்" போராட்டத்தால் கொழும்பிலிருந்து இரயில்கள் ஓடவில்லை.

29.05.1989

•

புலிகள் - அரசு பேச்சுவார்த்தையின் முதற்கட்டம் நிறைவுற்றது. யூன்மாத நடுப்பகுதியில் இரண்டாங்கட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்றும், முதற்சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங் காணப்பட்டது என்றும் இருதரப்பினராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

•

தங்கள் மாகாணசபை உறுப்பினர் சிவபாலராஜா வவுனியாவில்வைத்துக் கடத்தப்பட்டதைக் கண்டித்து, ஹர்த்தால் நடாத்துமாறு ENDLF கோரிக்கை விடுத்துள்ளது.

•

தென்னிலங்கையில் கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களில் 18பேரைக் காணவில்லையென்று புகார் செய்யப்பட்டுள்ளது.

•

அனைத்தியக்கக் கூட்டமொன்றைச் சிபார்சுசெய்த தொண்டமானின் யோசனைக்கு TULF, EROS, TELO வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.



02.06.1989

•

யூலைமாத முடிவிற்குள் இந்திய இராணுவம் திரும்புவதையே தான் விரும்புவதாக ஜனாதிபதி பிரேமதாச பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

•

கல்முனையில் இரு தமிழ்வாலிபர்கள் கடத்தப்பட்டதையடுத்து மீண்டும் அப்பகுதியில் பதற்றம் தோன்றியுள்ளது.

•

மட்டுநகர் சிறையிலுள்ளோரைப் பார்வையிட உறவினர்களை இந்திய இராணுவம் அனுமதித்தது.

•

சம்மாந்துறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் - முஸ்லிம் அகதிகள் தங்கள் வதிவிடங்களுக்குத் திரும்பினர்.

•

இரத்தினபுரி வர்த்தகர் ஒருவருக்கு AIDS வியாதி இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர் இலங்கையின் 14ஆவது AIDS நோயாளியாவார்

•

இந்திய இராணுவத்தால் யாழ் மருத்துவமனையில் கொல்லப்பட்டோர்க்கு இலங்கையரசு நட்டஈடு வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

03.06.1989 (ISLAND)

•

இந்தியத் துருப்புகளைத் திருப்பியனுப்புவது தொடர்பாக ராஜீவ்காந்தியுடன் பேச்சுவார்த்தை நடாத்துவேன் என்று ஜனாதிபதி பிரேமதாச பகிரங்கமாகக் கூறியது தொடர்பாக இந்தியா மிகவும் குழம்பியுள்ளதாக இந்தியத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

•

இலங்கையில் ஒரேயொரு அரசாங்கம் மட்டுமே செயற்படும். மாகாணசபை உள்மாகாணசபை அரசாங்கங்களல்ல என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

•

கொழும்பில் முஸ்லிம் விடுதலை முன்னணி என்று அழைக்கப்படும் அமைப்பின் ஆதரவாளர்களுக்கும் பொலிசாருக்கும் இடையிலேற்பட்ட மோதலில் பல பொலிசாரும் பொதுமக்களும் காயமடைந்தனர். 5 இ.போ.ச. வண்டிகள் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் கடமையிலீடுபடுத்தப்பட்டனர்.

06.06.1989.

•

மண்சரிவினால் 200பேர் கொல்லப்பட்டனர்.

•

வட, கிழக்கு மாகாணசபைக்கு இந்தியா ஒருகோடிரூபாய் உதவி வழங்கியுள்ளது.

07.06.1989

•

இதுவரை 'பம்பாய் வெங்காயம்' என்று அழைக்கப்பட்ட வெங்காயத்தை இப்போது 'சிறீலங்கா வெங்காயம்' என்று அழைக்கவேண்டும் என அத்துலத் முதலி அறிவித்துள்ளார்.

•

களனிகங்கை உடைப்பெடுத்ததால் கொழும்பில் 45ஆயிரம்பேர் அகதிகளாயினர்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



08.06.1989

•

பெருவெள்ளத்தால் இரத்தினபுரி, கேகாலை, ஹட்டன் ஆகிய பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்தனர். பலர் இறந்துமுள்ளனர்.

•

வட கிழக்கில் வலுவான பாதுகாப்பு அவசியந்தான். ஆனல் அதனைச்சாட்டி இந்தியப்படையை எமது மண்ணில் வைத்திருக்க முயற்சிக்கலாகாது என்று நவசமாஜியக் கட்சியின் தலைவர் கலாநிதி. விக்கிரம கருணரத்ன குறிப்பிட்டுள்ளார்.

*

"இந்தியாவின் தயவிலிருப்போர் இன்று எம்.பி.க்களின் பாதுகாப்புபற்றிக் கவலைப்படுகின்றனரேயன்றி, இந்திய இராணுவத்தால் எமது மக்கள் கொல்லப்பட்டதுபற்றியும் கற்பழிக்கப்பட்டதுபற்றியும் எதுவும் பேசமுடியவில்லையே" என்று புலிகளின் அறிக்கை தெரிவித்துள்ளது.

•

இந்தியப்படை வெளியேற்றத்தில் எமக்கு முரண்பாடில்லை. ஆனல், தமிழ்மக்களின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டே இந்தியப் படைவிலகல் நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்று ஈரோஸ் தெரிவித்துள்ளது.

07.06.1989

•

உடனடியாக இந்தியத்துருப்புகளைத் திருப்பியழைக்குந் திட்டத்தை இந்தியா நிராகரித்துள்ளது. இந்திய எதிர்க்கட்சிக் கூட்டணியான தேசிய முன்னணி,"இந்திய

–

09.06.1989

•

யாழ்நகரில் ஒரு முஸ்லீம் வர்த்தகர் இனந்தெரியாத நபர்களால் அழைத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டதைக் கண்டித்து அனைத்து வர்த்தக ஸ்தாபனங்களும் ஹர்த்தாலில் ஈடுபட்டனர்.

10.06.1989

•

இந்தியப்படைகள் போனதும் இலங்கைப்படைகள் மீண்டும் வட-கிழக்கில் சேவையிலீடுபடுத்தப்படும் என்று பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின குறிப்பிட்டுள்ளார்.

12.06.1989

•

இந்தியபிபடை வாபஸ்பெறப்படக்கூடாது என்று ENDLF தெரிவித்துள்ளது.

•

இரண்டாங்கட்டப் பேச்சவார்த்தை நடாத்த திலகர், பாலசிங்கம் ஆகிய விடுதலைப்புலிகள் முக்கியஸ்தர்கள் கொழும்புவந்து சேர்ந்தனர்.

13.06.1989

•

இந்தியப்படை வாபஸ்பெறப்படக்கூடாது என்று ஈழத்தமிழர் ஒன்றியத்தரல் மட்டக்களப்பில் 4மைல் தூரத்துக்கு ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது.

•

புலிகளுக்கு இலங்கை இராணுவம் ஆயுதம் வழங்கிவருவதாக PLOT, EPRLF ஆகிய இயக்கங்கள் கூறுவது "ஒரு கட்டுக்கதை" என்று புலிகள் நிராகரித்துள்ளனர்.



21.06.1989

•

அவசரகாலச்சட்டம் மீண்டும் அமுலாக்கப்பட்டுள்ளது.

•

யூலைமாத இறுதிக்குள் இந்தியப்படைகள் வெளியேறவேண்டும் என்ற இலங்கையரசின் பின்னணியில் வெளிநாட்டுச் சக்திகள் இருக்கலாம் என்று பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார். (HINDU)



11.06.1989

•

இந்தியப் பொருட்களின் பகிஸ்கரிப்புத் தொடர்பான JVPயின் சுவரொட்டிகள் காரணமாக பல தனியார் நிறுவனங்களின் இந்திய இறக்குமதி குறைந்தபோதும், அரச இறக்குமதிகளில் மாற்றமில்லை என வர்த்தக அமைச்சர் மன்சூர் குறிப்பிட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நமது பார்வையில்...

வசனங்களே இல்லாமல் ஒருபடம் தயாரிப்பது இப்போது சாத்தியமா? இக் கேள்விக்கு தனது பதிலை ஒரு திரைப்படம்மூலம் தந்திருக்கிருர் சிங்கீதம் சீனிவாசராவ் என்ற நெறியாளர். வசனங்களே இல்லாமல் போனதால் இதை எந்த மொழிப்படம் என்று சரியாக வரையறுக்க முடியாவிட்டாலும் தமிழில் ரசிகர்களுக்கு "பேசும் படம்" என்றே இந்தப் பேசாத படம் அறிமுகமாயிற்று. கமலஹாசன், அமலா என்றதும் 'குளு குளு' காட்சிகள் என்று கற்பனையோடு பார்த்தால் ஏமாற்றம். பதிலாக எல்லாமே 'கல கல' அதாவது நகைச்சுவை. இப்படத்தில் வேலையில்லாத இளைஞனொருவனைப் பற்றிய கதையை நகைச்சுவையாகக் கூறும் இயக்குநர் அவனது பிரச்சனையைக் கொச்சைப்படுத்தவில்லை, பாலசந்தரோ பாரதிராஜாவோ செய்ததுபோல. பதிலாக அவனுள் துளிர்க்கும் ஒரு வித்தியாசமான ஆசையை மிகச் சுவைபடக் கூறியிருக்கிருர். இவரைவிட வேறு யாராவது இந்தமாதிரி விசப் பரீட்சையில்



இறங்க மாட்டார்கள். திக்கற்ற பார்வதி, ராஜபார்வை, இரு நிலவுகள் உட்படப் பல நல்ல அல்லது சகிக்கக்கூடிய படங்களை நெறிப்படுத்திய சீனிவாசராவைப் பாராட்டத்தான் வேண்டும். நீண்ட, அனல்பறக்கிற, பொறுமையைச் சோதிக்கிற வசனங்களோடு வெளிவரும் தமிழ்ப்படங்களிடையே "பேசும் படம்" ஒரு பெரிய ஆறுதல், மாறுதலுங்கூட. ஐம்பது வருடம் கழித்துத் தமிழ்ச் சினிமாபற்றி ஆராயப்பட்டால் "கொடி பறக்குது" காற்றில் பறந்துவிடும். "பேசும் படம்" அப்போதும் பேசப்படும்.

*

உலகின் பல மூலைகளிலும் நடக்கும் யுத்தங்களைச் சில சமயங்களில் தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் படமாகப் பார்க்கமுடிந்திருக்கும். ஆனுல் இதனைப் படமாக்க எத்துணை சிரமப்பட்டிருப்பார்கள் என்று நினைக்கையில் உடல் நடுங்குகின்றது. அண்மையில் தாய்லாந்து எல்லையில் "SOLDIER OF FORTUNE" என்ற மாத சஞ்சிகையின் செய்தியாளர், பர்மாவின் காரென் சிறுபான்மை இன கெரில்லாக்களுக்கும், பர்மீய ராணுவத்துக்குமிடையில் இடம்பெற்ற சண்டையைப் படம்பிடிக்கையில் பலியாளுர். லான்ஸ் யூஜின் மொட்லி(32) என்ற இந்தச் செய்தியாளர் கெரில்லாக்களுடன் மூன்று நாட்களுக்கு முன்பே பர்மாவினுள் நுழைந்திருந்தார். முன்னர் தாய்லாந்தில் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியொன்றைப் படம்பிடித்த அவுஸ்திரேலிய பத்திரிகையாளர் ஒருவரும் இவ்வாறு கொல்லப்பட்டார். பத்திரிகைகளால் அவரது உடலை மூடியே அவருக்கு அஞ்சலி செய்தார்கள். எமது நாட்டில் போர்முனைக்கு நேரில்சென்ற பத்திரிகையாளர்கள் எத்தனைபேர்?

## ...நாட்டு நடப்புகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


புதிதாக ஒரு குழந்தை பிறந்து குழந்தைக்குப் பெயர் வைப்பதென்பது சிரமமா? இல்லை என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் அண்மையில் சிலர் கூறிய கதைகளைக் கேட்கும்போது அதுவும் சிரமமாகப் படுகின்றது. வேறொன்றுமில்லை, இந்த எண் சோதிடம் இருக்கிறதே அதுதான் சிக்கல்களுக்குக் காரணம். முன்பெல்லாம் பெயர் வைப்பதற்கு முதலெழுத்துத்தான் அதிகம் தேவையான விசயம். இப்போது எண்சோதிடம் பெற்றோரை படாதபாடு படுத்துகின்றது. தங்களுக்குப் பெயரில் அதிர்ஸ்டமில்லை என்று கூறி பெயரையே மாற்றும் பெரியவர்கள் இருக்கையில், முற்பாதுகாப்புக்காக குழந்தைகளுக்குப் பொருத்தமான எண்ணில் பெயர்வைப்பதை எப்படிப் பிழைசொல்ல முடியும்?



*

ஜனாதிபதி பிரேமதாச கொஞ்சம் துணிச்சலை வெளியிட்டிருக்கிறார். இந்தியப் படைகள் வெளியேற நாள் குறித்துச் சொன்னதற்காகப் பாராட்டியே ஆகவேண்டும். (புலிகளையா, பிரேமதாசாவையா என்பதுதான் புரியவில்லை)

நிரந்தரமான கேந்திரமொன்றை அமைக்காமல் இலங்கையைவிட்டு இந்தியா வெளியேறாதென நண்பரொருவர் கூறினார். இந்தியா வெளியேறினால் இலங்கை இன்னும் பெரிய யுத்தகளமாகிவிடுமோ என்று பயமாகவிருக்கிறது. ஆப்கானில் ருசியப் படைகள் அகற்றப்பட்ட பின்பே சண்டை உக்கிரமாயிற்று. அமெரிக்காவும் ருசியாவும் தமது ஆயுதங்களை ஆப்கான் மக்கள்மீது பதம்பார்த்து வருகின்றன. அமைதி நிரந்தரமாகவே தொலைந்து போயிற்று. வல்லரசுகளின் பலப் பரீட்சைக்கு ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள் மிக நல்ல தளங்களாகப் பயன்பட்டமைக்கு ஆப்கான், வியட்நாம், கம்போடியா, நமீபியா மற்றும் நிக்கரகுவா போன்ற நாடுகள் நல்ல எடுத்துக்காட்டு. இந்த வரிசையில் எமது நாடும் சேர நேரிடலாம்.



*

கணணியைத் தெரியுமா? (யார் இந்தப் பெண் என்கின்றீர்களா?) மனித மூளைகளை செல்லாக் காசாக்கத் துடிக்கும் கம்பியூட்டர்களின் தமிழ்ப் பெயர்தான் கணணி. தற்போது கணணிகள் முற்றாகத் தமிழிலேயே வடிவமைக்கப்பட்டு விற்கப்பட்டு வருகின்றன. தமிழகத்திலும் இலங்கையிலும் இவை கிடைக்கும். இவ்வளவுதூரம் வந்தபின்பும் தமிழில் கணணியைப்பற்றிப் பயில்வதென்றால் சிரமசாத்தியந்தான். தமிழின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் பலரும் விஞ்ஞான நூல்களைத் தமிழில் வெளியிடுவதுபற்றி அக்கறை கொள்ளாமை இதற்கு முக்கிய காரணம். கணணிபற்றி வெளிவந்த ஓரிரு தமிழ் நூல்களில் சுஜாதா எழுதிய "கம்பியூட்டரின் கதை" சிறப்பானது. யார் இந்த சுஜாதா? தமிழ் உரைநடையில் ஒரு புரட்சியையே உண்டாக்கியவர்தான் இந்த சுஜாதா. இவர் ஒரு பொறியியலாளருங்கூட.

www.tamilarangam.net

# கம்பியூட்டர்... கம்பியூட்டர்



இன்று கம்பியூட்டரைப்பற்றி கேள்விப்படாமல் யாருமே இருக்கமுடியாது என்று அடித்துச் சொல்லலாம். பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சிகள் போன்ற தொடர்புசாதனங்களில் விதம்விதமான கம்பியூட்டர் விளம்பரங்களை தினசரி காண்கின்றோம். எங்கும் எதிலும் கம்பியூட்டரின் ஆதிக்கம் அதிகரித்துவருகின்றது. இந்நிலையில் கம்பியூட்டர்பற்றிய அடிப்படை விபரங்களை எந்தளவு அறிந்துவைத்திருக்கிறோம்?

மிக நுணுக்கமும், சிக்கலும், அதிசக்தியும் வாய்ந்த கம்பியூட்டரொன்று எங்களிடமிருப்பது உங்களுக்குத் தெரியுமா? ஆம், அதுதான் மூளை. இந்த மூளை என்ன செய்கின்றது? நாம் அறிந்த தகவல்களை (information) சேகரித்து(store) வைத்து தகவல்களின் அடிப்படையில் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்கின்றது. ஆனல் குறிக்கப்பட்ட எல்லைகளுக்கப்பால் எங்கள் மூளையினல் தகவல்களைச் சேகரித்துவைக்க இயலாமற் போய்விடுகின்றது. இன்றைய நவீன உலகில் ஏராளம் ஏராளமான தகவல்களை நாம் அறிந்து சேகரித்துவைக்க வேண்டியதாகவுள்ளது. எமது இந்தத் தேவையினைப் பூர்த்திசெய்ய எமக்கு மேலதிகமான ஒரு மூளை தேவைப்படுகின்றது. கம்பியூட்டர் இந்த மேலதிகமான மூளையாக எமக்கு உதவுகின்றது என்று இலகுவானமுறையில் விளங்கிக்கொள்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கம்பியூட்டருக்கும் மனிதமூளைக்கும் இடையிலுள்ள பெரிய வேறுபாடு என்னவெனில், மூளை சுயமாக இயங்குமாற்றல் கொண்டது. ஆனால் கம்பியூட்டர் எங்களின் பணிப்பின் பெயரிலேயே (instruction) இயங்கவல்லது. எங்கள் பணிப்பின்படி, எங்களால் பலநாட்களில் செய்துமுடிக்கவல்ல வேலையினை சிலநிமிடங்களில் கம்பியூட்டர் செய்துமுடிக்கின்றது.

ஒரு மின்சார அடுப்பினுல் உணவைச் சமைக்கமட்டுமே முடிகின்றது. வானொலியினுல் ஒலிபரப்பமட்டுமே முடிகின்றது. இவ்வாறு ஒருகாரியத்தை மட்டுமே செய்யவல்லவற்றை "Single function" என்று சொன்னுல் கம்பியூட்டரை "Multi function" என்று சொல்லமுடியும். அதாவது கம்பியூட்டரின் தொழிற்பாடானது பல்வேறுகாரியங்களுக்கு அதனுருவம், அமைப்பு என்பவற்றை மாற்ருமலேயே பயன்படுத்தப்படவல்லது. இன்று விளையாட்டிலிருந்து (computer game) விண்வெளிப்பயணம்வரை கம்பியூட்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன என்ருல் பாருங்களேன்!

இன்று ஏராளமான கம்பியூட்டர்கள் பல்வேறு உருவங்களிலும், அளவுகளிலும் தயாராகின்றன. ஒரு பெரிய(main frame) கம்பியூட்டருக்கும் ஒரு சிறு (mini computer) கம்பியூட்டருக்கும் இடையில் அடிப்படையில்(principal) வேறுபாடில்லை. ஆனுல் அவற்றின் தொழிற்பாடுகள் அவற்றின் சக்திக்கேற்ப (memory power) வேறுபடுகின்றன. உதாரணமாக இங்குள்ள பொலிஸ் நிலையங்களுக்கு நீங்கள் சென்ருல் உங்களைப்பற்றிய அனைத்துத் தகவல்களையும் அவர்கள் விரல்நுனியில் வைத்திருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இதுபோன்ற பாரிய அளவிலான தகவல் சேகரிப்புக்கு பெரிய கம்பியூட்டர்களே பாவிக்கப்படுகின்றன. இதனை இயக்குவதற்கு சில விசேட நெறிகளையும் பயிற்சிகளையும் நாம் பெற்றிருக்கவேண்டும். ஆனுல் இன்று சிறிய கம்பியூட்டர்கள் சாதாரணமாக வெறும் இயக்கக்கூடியவாறு தயாரிக்கப்பட்டுள்ளன.

நுண்ணிய கம்பியூட்டரையே (micro computer) சாதாரணமாக நாம் வாங்கிப் பயன்படுத்துகின்ருேம். இது இரண்டு வகைகளைக் கொண்டுள்ளது.

1. Personel Computer
2. Home Computer

இவை இரண்டுமே வித்தியாசமான ஆற்றல்களையும் (capabilities) உபயோகங்களையும் (applications) கொண்டுள்ளன. Home computerஐப் பொறுத்தவரையில் விலையில் இது மலிவானதுடன் (உ+ம்:- ATARI 400, ZX 81) மட்டுப்படுத்தப்பட்ட ஆற்றல்களையுங் கொண்டுள்ளது. ஆனுல் Personal computer அதிக ஆற்றல்களைக் கொண்டிருப்பதாலும் அதன் உபயோகம் Home computerஐ விட பலமடங்கு அதிகமானதாலும் அவற்றின் விலையும் மிக அதிகமாக இருக்கின்றன. இந்த Personal computer கள்தான் விஞ்ஞான ஆய்வுகள், ஆராய்ச்சிகள், திட்டங்கள், சுவடிகள் பராமரிப்பு போன்ற சிக்கலான விடயங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. மேற்கத்தைய நாடுகளில் அலுவலகங்களில் பணிபுரிவோர் மாலையில் வீடுசெல்லும்போது "அலுவலகத்தை"யே தங்களுடன் எடுத்துச்சென்று வீட்டில் பகுதிநேர வேலை செய்கின்ருர்கள் என்ருல் இந்தக் கம்பியூட்டரைப்பற்றி உங்களால் புரிந்துகொள்ள இயலும்.

– யோகேசன் கனகசிங்கம் –

ஒரு கம்பியூட்டரானது:

1. Key board
2. Micro processer
3. Memory
4. Display screen
5. Language
6. Storage
   (1) Disk
   (2) Hard disk



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற பகுதிகளைக் கொண்டுள்ளது.

இப்போது நீங்கள் வாசிக்கும் சுவடுகள் சஞ்சிகைகூட கம்பியூட்டரின் துணைகொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது. சுவடுகளுக்குவரும் ஆக்கங்கள், அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட word Processor இன் துணைகொண்டு Key board மூலம் பதிவுசெய்யப்படுகின்றது. இதில் பதிவுசெய்த அனைத்தையும் Hard disk எனப்படும் கனபரிதியில் சேமித்து பின்னர் கதிர் அழுத்தி(laser print) மூலம் அச்சிட்டு "சுவடுகள்" தயாராகின்றது.

கம்பியூட்டரைப்பற்றி ஒருசில பக்கங்களில் தெளிவாக விளக்கிவிட முடியாது. கம்பியூட்டரைப்பற்றி ஒரு அறிமுகத்தைத் தரவே இக்கட்டுரையை எழுதியுள்ளேன். சந்தர்ப்பம் வரும்போது கம்பியூட்டர்பற்றி மேலும் எழுத எண்ணியுள்ளேன். ●



## விடுதலை?

"அடோ! என்று
"அவர்கள்"
அழைத்தது பொறுக்காமல்
ஆயுதம் ஏந்தினோம்
"அடேய்! என்று
"இவர்கள்"
அழைப்பதைமட்டும்
எப்படி
விடுதலையெனலாம்?





www.tamilarangam.net

அன்று மாலை குளிப்பதற்காக
மாமி எனக்கு நீர்மொண்டு ஊற்றினாள்
கூந்தலைப் பின்னிப் பொட்டும் வைத்தாள்.
உப்பும் மிளகாயும் பொத்திய கையால்
என் உடலைத் துடைத்து
அடுப்பில் போட்டாள்.
வெடித்த போது என்மீது பட்ட
கண்ணூறு தீர்ந்த தென்று மகிழ்ந்தாள்.
குடும்பக் கதைகள் பல பல சொன்னாள்
உலகறியாத ஒருவனை மணந்து
வாழ்வின் மேடு பள்ளங்க ளெல்லாம்
அவனையும் நடத்திச் சென்ற தன்
வல்லமை உரைத்தாள்.
ஏன் இதையெலாம் என்னிடம் சொன்னாள்?
இறுதியாக
தாழ்வாரத்தில் தூங்கிய சங்கினுள்

விரலை விட்டு விபூதி எடுத்தென்
நெற்றியிலிட்டாள்.
கண்ணகைத் தாயே எனது வம்சம்
செழிக்க வரம் தா என்று இரந்தாள்
பின்னர் என்னிடம்
''எத்தனை நாளாய் மாதவிலக்கு
தள்ளிப் போனது?''
கேள்வியோடு முகத்தில் புன்னகை.
சுருக்கென எனது நெஞ்சில் நெருடல்.
என்னை அறியாது விரல்களை மடித்து
எண்ணத் தொடங்கினேன்.
நாவைக் கடித்தேன்.
மாத விலக்கைக் கோட்டை விட்டது
அப்போதுதான் என் பிரக்ஞையில் உறைத்தது.
தனி வழிப் பாதையில் கடைசி 'பஸ்'சையும்
கோட்டை விட்டதுபோல் ஒரு திகில் பரவும்.
எனது கண்ணின் கலங்கலைத் துடைத்து
உச்சி முகர்ந்தாள்.

அன்றைக் கிரவென் தந்தை அழைத்தார்
தயக்கமாயிருந்தது.
நெடு நேரமாக வார்த்தை வராமல்
உச்சி முகர்ந்து
ஒன்றுமில்லை என்று மழுப்பினார்.
சற்றைக் கெல்லாம்
குங்குமப் பூ மிதக்கும் பாலுடன்

மாமி வந்தாள்
வெட்கம் என்னைப் பிய்த்துத் தின்றது.

உடல் களைத்திருந்தும் தூக்கம் வராமல்
பாயில் புரண்டேன்...
மாப்பாணனைச் சபித்தபடிக்கு...
முல்லை மலர்கள் தொப்புத் தொப்பெனச்
சொரிகிற நேரம்...

சன்னல் மீதும் தொப்புத் தொப்பென
சத்தம் கேட்டது...
பிரமையோ என்று எழுந்து போனேன்
திறந்த சன்னலால் கைகளைப் பற்றி
சற்று முன்தான் கதிரடி ஓய்ந்தது
மன்னித்துக்கொள் என்று இரந்தான்.
தூக்கம் வந்தது...
குரல் தளதளக்க உளறத் தொடங்கினான்.

எமது உடலில் சுகம் இருந்தால்
போதும் கண்ணே
எமது மண் எமது கைகளில் இருந்தால்
போதும் கண்ணே
போரில்லா தெம் வாழ்வு நடந்தால்
போதும் கண்ணே
வானைப் பிளந்து சுவர்க்க பதியை
மண்ணில் இருத்தலாம்
மண்ணை எமது வம்சக் கொடிக்காய்
செம்மைப் படுத்தலாம்...
என்றவாறு ஏதேதோ பேசினான்
மகிழ்ச்சியோடு தூக்கம் வந்தது
கொட்டாவி விட்டேன்
பொழுது புலர்கையில் சன்னலை அடைத்து
படுக்கப் போனேன்.

மறுநாள் ஊரின் பெரிய மனிதர்கள்
வீட்டுக்கு வந்தார்.
வாய் பேசாத என் மாமா கூட
சிரித்தபடிக்கு
சாப்பிட்டுவிட்டு தாம்பூலம் தரித்து
எமது திருமணத்தை நிச்சயம் செய்தார்.
வருகிற திங்கள் முகூர்த்த மென்று
நமது பூசாரியார் விடை கொடுத்தார்.
எல்லாம் முடிவாகிய இரவு
குறும்புக்கார சிறுமியைப் போல
மீண்டும் வந்தது மாதவிலக்கு.
உருண்டு உருண்டு யாவரும் சிரித்தோம்

போரின் உள்ளும்
மரணத் துள்ளும்
ஆயிரம் துன்பச் சுமைகளி னுள்ளும்
வாழ்வுதான் எத்தனை இனிமையானது.
அகதி வாழ்வில் அன்னிய மண்ணில்
வறுமையில் வாடும் கவிஞன் ஒருவனே
'இனியது வாழ்வு' என்று பாடினால்
இந்த வாழ்வு எத்தனை புதுமை.
மாதவிலக்கின் குறும்பை நினைத்து
முதலிரவு முழுவதும் நாங்கள் சிரித்தோம்.

முதல் வசந்தத்தில் கிழக்கு மாகாணத்தில்
முஸ்லீம் நண்பன் ஒருவனின் வீட்டில்
விருந்தினராக நாங்கள் இருந்தோம்.

www.tamilarangam.net

இனிய தமிழில் அவர்கள் பாடும்
கிராமியப் பாடல்களில் மகிழ்ந்தோம்.
அயலிலுள்ள தமிழ்க் கிராமத்தில்
வயல் வெளிகளிலே
வட்டக்களரி அரங்கு போட்டு
வடமோடிக் கூத்து ஆடுதல் பார்த்தோம்
ஆடியுமென்ன பாடியுமென்ன?
பாரம்பரிய மண் பறிக்கப்பட்ட பின்

கண் விழிக்காமல்
ஆடல் பெரிது பாடல் பெரிதென
அடித்துக் கிடக்கிறார்.

விடைபெற விருந்த நாளில் ஒரிளைஞன்
முற்றத்தில் நின்று
எமது முஸ்லீம் நண்பரோடு
வாதம் வளர்த்தான்.
இருபத்தைந்து ஆயிரம் ரூபா வரியாய்க் கேட்டு
தர்க்கிக்கிறதாய் மாப்பாணன் சொன்னான்.

முஸ்லிம்களுக்கு
இரண்டு பக்கமும் அடியென எமது
நண்பர் வெகுண்டார்.
முஸ்லிம் என்னாதே நீயும் தமிழன்
என்றான் இளைஞன்.
தமிழன் என்கையில் இலங்கையன் நீஎனும்
ஜெயவர்த்தனாவின் குரலைப் போலவே
அந்த இளைஞனின் குரலும் ஒலித்தது.
குறுக்கிடத் துடித்த மாப்பாணனை நான்
அமைதிப் படுத்தினேன்.
நீயார் நான் யார் என்பதை இங்கே
யார் நிர்ணயிப்பது, ஜெயவர்த்தனாவா?
ஆயுதம் தரித்த இளைஞர் சிலரா?
அல்லது நாமா?
நண்பன் குரல் மீண்டும் ஓங்கியது.
தமிழருக் கெதிராய் இஸ்ரவேல் வந்ததை
எதிர்த்து நாங்கள் இரத்தமும் சிந்தினோம்.
தாய்மண் காக்கப் பேரணி திரண்டோம்
நாங்கள் முஸ்லிம் நீங்கள் தமிழர்
நாங்கள் யாவரும் தமிழ் பேசும் மக்கள்
என்கிற வகையில் இயல்பாய் மலர்கிற
ஒருமைப்பாட்டை ஏன் சிதைக்கின்றீர்?
நண்பர் கொதித்தார்.
நமக்கு யாவும் சங்கடமானது.

விடை பெறுகையிலே
இளைஞன் செயலுக்கு வருத்தம் சொன்னோம்.
தமிழ் பேசும் மக்கள் நாங்களனைவரும்
நமது மண்ணை நமக்காய் மீட்டிட
ஒருமைப்படுவோம் உருக்கென நிமிர்வோம்
என்று நாங்கள்
ஒருவர்க் கொருவர் உறுதி கூறினோம்.

இப்படியாக
ஆபத்தான அந்த நாட்களில்
இலங்கைத் தீவை நாங்கள் அளந்தோம்.
அந்த நாட்களில்
எனது வயிற்றுச் சிப்பியுள்
முத்துத் திரண்டது.

மீண்டும் அமைதி...
ஆறு இப்போ நாங்களிருந்த
மரக் கட்டைக்கும் மேலே பாய்ந்தது.
வீரனை எடுத்து
உயரமானதோர் கிளையில் இருத்தினேன்.
காடுகள் அஞ்சின
பாலி ஆற்றை யாசித்து அழுதன.
வேரை அறுக்காதே
கிளையை முறிக்காதே
கன்றுகளை மூழ்கடிக்காதே
இரக்கம் காட்டு இரக்கம் காட்டு
என்று அழுதது காடு...
பறவைகள் தொடர்ந்தும் சண்டையிட்டன.
எழுந்து சற்றுப் பின் செல்வோமா
என்று நான் கேட்டேன்.
சும்மா இருவென்றாள்...
கண்ணுக் கெட்டிய தூரம் வரைக்கும்
வெள்ளக் காடு

திரும்பி நான் செல்வதே சிரமமாகலாம்
என்பதை உணர்ந்தேன்.
எனினும் வாயை மூடியிருந்தேன்.
மீண்டும் ரதிதேவி பேசத் தொடங்கினாள்.

ஒரு நாள்க் காலையில்
'முறுகண்டி'யிலே ராணுவ ரயில் ஒன்று
தகர்க்கப்பட்டதாய்ச் சேதி வந்தது.
நேரம் செல்ல நேரம் செல்ல
மகிழ்ந்தவரெல்லாம் கலவரப்பட்டனர்.
முறுகண்டி இருபது கல் தொலைவென்கிற
பிரக்ஞை வயிற்றில் புளியைக் கரைத்தது.
மாப்பாணன் மட்டும் மறிக்க மறிக்க
வயலுக்குச் சென்றான்...
போராட்டத்தால்
உரமும் மருந்தும் அருகிப் போக
புதுரக நெற்கள் பொய்க்கத் தொடங்கின.
எங்கெங்கோ அலைந்து சேகரித்த
பழைய நாட்களின் நெல் மணியோடு
பரிசோதனைக்காய் வயலுக்கு ஓடினான்.
மதியமானது
மாப்பாணன் வேறு வயலில் இருந்தான்
நகர்ப் புறமாக
துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது.

அழுதபடிக்கு வயல்ப் பக்கம் ஓடினேன்
அத்தி மரத்து நிழலில்
குருவி பறந்த முட்டைக் கோதாய்
வெறுமையாக உழவு வண்டி.
சுவரில் மோதிய பந்தெனத் திரும்பினேன்
வீட்டிலிருந்து மரண ஓலம்
நினைவு தவறித் தெருவில் விழுந்தேன்.

www.tamilarangam.net

இரவு கண்களை விழித்தபொழுது
தாதிமார்கள்......
டாக்டர்......

அழுதபடிக்கு அப்பா...
மாப்பாணன் மட்டும் அங்கே இல்லை.
தொடையில் ஏதோ பிசு பிசுத்தது...
காற்றில் இரத்த வாடை இருந்தது.
மாப்பாணன் எங்கே என்றபடிக்கு
நினைவை இழந்தேன்.
மாப்பாணனைச் செருவில் இழந்தேன்
எமது மதலையைக் கருவில் இழந்தேன்
தனித்த மரமாய் நெடுநாட் கிடந்தேன்.

விம்மி விம்மி அழுத என்னை
அழாதே என்று தேற்றிய படிக்கு
அருகே வந்து தோள்களை உசுப்பினாள்.
பின் நடந்தது என்ன ரதி! என வினவினேன்.

ஊர் வியக்க
மீண்டும் பெண்ணாய் எழுந்தேன் கவிஞ!
கொதிப்பினோடும்
மாணவப் பருவத்துத் துடிப்பினோடும்
துர்க்கை போல் எழுந்தேன்.
இதன் பின்
எல்லா விடுதலை இயக்கத்தவர்க்கும்
எனது வீடு ஆதரவானது.
நடுச் சாமத்தில் யார் யாரோ வருவர்
அடுப்பை மூட்டுவேன்
ஆயுதங்களைப் பதுக்கி வைப்பேன்
கிழிந்து போன உடைகள் தைப்பேன்
தகவல் மையமாய்...
வைத்திய சாலையாய்...
உணவு விடுதியாய்...
எத்தனை புதிய பரிமாணங்கள்
எனது வீட்டுக்கு.
அப்பா ஒன்றும் பேசவில்லை...
மாடாய் உழைத்தார்...
மாமியும் அப்படி.

# எட்டு

ஒரு நாள் இரவு
பி. பி. சி.யில் தமிழோசை கேட்டு
வானொலி அணைத்து
படுக்கை விரிக்கையில்
படலை திறக்கும் சத்தம் கேட்டது.
மூன்று விடலைக் கொரிலா வீரர்கள்
வாசலில் நின்றனர்.
றைபிளைக் கழற்றிச் சுவரில் சாத்தி
தேனொழுக அக்கா என்றனர்.

காளான் பொதியை ஒருவன் நீட்டினான்...
அக்காவுக்கு...என்று மற்றொருவன்
தேன் நிரம்பிய புட்டியை நீட்டினான்...
பால் வடியுமவர் முகங்களைப் பார்த்து
விசயம் என்ன? என்று கேட்டேன்.
எமது இயக்க அதிரடிப் படையின்
தளபதி 'காஸ்ரோ' நாளை வருகிறார்
எமது கிராமத்தில் இரு நாள்த் தங்க
நம்பிக்கையான விடுதி இல்லையே
என அங்கலாய்த்தார்...
இது உங்கள் வீடென்றேன் நான்
மகிழ்ந்து போனார்...
யோசித்துப் பார்த்துப் பதில் சொல் அக்கா!
ஆபத்தான பணி இது என்றான்—
ஒரு போராளி.

இருப்பது என்ன யோசிப்பதற்கு
அடிமை விலங்கைத் தவிர நம்மிடம்
இருப்பது என்ன யோசிப்பதற்கு.
மகிழ்ந்து போனார்.
தம்பி நீங்கள் ஒற்றுமைப் பட்டால்
உயிரும் தருவார் எமது மக்கள்.
ஏன் உட் கொலைகள்?
ஏன் சக இயக்கங்களோடு மோதல்?
சிறுவரின் முகங்கள் சாம்பிப் போயின.
''ஒற்றுமைதான் எம் உயிர் மூச்சக்கா
தமிழகத்திருக்கும் தலைவர்கள் அதனை
உணர்கிறாரில்லை, நாம் என் செய்வோம்!''
இயலா ஏக்கம் அவர்களின் குரல்களில்
இருள் சூழ்ந்தது அவர்களின் கண்களில்.

எல்லோர் தலைக்கும் எண்ணெய் தடவி
காளான் கறியும் சோறும் படைத்து
விடை தருகையிலே கண்களில் வெள்ளம்.
எமது வீட்டுக்கு 'காஸ்ரோ' வந்ததும்
அதிர்ந்து போனேன்.
'கிருபா' நின்றான் என் முன்னாலே.
யார் அது ரதியா எனப் புன்னகைத்தான்.
எங்களை விடவும் கொரிலா வீரர்
உன்னை மதிக்கிறார் என்றும் சொன்னான்.
''புகழ்ச்சி எதற்கு போர்க்கள வாழ்வில்
போதும்'' என்றேன்.
சமையலறையில்...
சீரகம் எங்கே தேவி என்று
மாமி அழைத்தாள்.

மறு நாள் நாங்கள் தனித்திருக்கையிலே
'காதலுக்கிப்போ தடை இல்லை' என்றான்
'ஏனிதைச் சொல்கிறாய்' என்று நான் கேட்டேன்
முறுவலித்தான்.
''காதல் செய்யேன்
வேண்டா மென்று யார் சொன்னார்கள்
ஏனிதை என்னிடம் சொல்கிறாய்'' என்று
சலித்துக் கொண்டேன்.

www.tamilarangam.net

கிணற்றில் வாளி இருக்கிறதா என வினவியபடிக்கு
சட்டையைக் கழற்றினான்
துவாயை எடுத்தான்...
பத்து வருடங்கள் ஒரு நொடியானது...
எனது கைகளால் வைத்தியம் செய்த
வீரத் தழும்பினை மீண்டும் பார்த்தேன்.
மேலும் புதிய தழும்புகள் இருந்தன.

'கிருபா' என்றேன்
'இதுவா தமிழர் விதி'என நொந்தேன்.
பிரிவினை சாத்தியப் படுமா என்று
அவனிடம் கேட்டேன்...
மௌனச் சிரிப்பின் முடிவில் சொன்னான்
''சுதந்திரமான நம் இருப்புக்காகவே
போராடுகின்றோம்...
இது பற்றி ஒரு கவிதை படித்தேன்
சொல்லவா தேவி...''
'சொல்' எனக் கோரினேன்.

''எமது இருப்பை
உயர்ந்த பட்சம் உறுதி செய்யும்
சமூகப் புவியியல் தொகுதியே தேசம்
எங்கள் இருப்பை உறுதி செய்திடும்
அடிப்படை அவாவே தேசப் பற்று
நாடுகள் என்று இணைதலும் பிரிதலும்
சுதந்திரமாக
மானிட இருப்பை உறுதி செய்திடவே''

நீண்ட நேரம் மௌனமாய் இருந்தோம்.
ரதி என்றபடி மெல்ல எழுந்தான்
எமது நட்பைக் கெடுத்து விடாதே
என்றதும் மீண்டும் இருக்கையில் அமர்ந்தான்
மன்னித்திடுக என்றபடிக்கு.
பாவமாய் இருந்தது...
தீர்மானமின்றி உணர்ச்சிகளாலே
வழி நடத்தப்படாதே என்று
என்னை அதட்டினேன்.
எனினும் மனதில் இரக்கம் சுரந்தது.

வெள்ளம் இப்போது வயிற்றைத் தொட்டது
வா எழுந்து போகலாமென்றேன்.
''வர இயலாது
விரும்பினால் போ'' என்ற ரதியின் கைகளை
பற்றிக் கொண்டேன்.
மரங்களிப்போ ஆற்றைத் திட்டின
பறவைகள் தொடர்ந்தும் அடித்துக் கொண்டன
வானம் இருண்டது...
வீரன் கல்லாய் திகைப்பில் உறைந்தான்
ரதி தனது கதையைத் தொடர்ந்தாள்.

'கிருபா' சென்று சில நாட்களுள்ளே
எனது வீட்டில் தங்கும் முடிவுடன்
ஜூலி வந்தாள்
மகிழ்ந்து போனேன்.
உயிர்த் தோழியிடத்தும்
வாய் திறக்காத ஒரு பெண் ஜூலி.
விடுதலை அமைப்பில் பெண்கள் சமத்துவம்

விடுதலை அமைப்புகள் ஒற்றுமைப்படவும்
மக்களுக்குள்ளே
இயக்க முதன்மையை நிறுவுதல் விடுத்து
இயக்கத்துக்குள்ளே
மக்கள் முதன்மையை நிறுவுவதற்கும்
இரண்டாம் தரப் போராளிகளாய்
பெண்களைத் தாழ்த்தும் போக்கைத் தகர்க்கவும்
மாதர் எழுச்சியே மார்க்க மென்றுரைத்தாள்.

முன்னைப் போலவே
பெண் உருவெடுத்த ஆயிரம் கனவாய்
அயராத உழைப்பாய்
துணிச்சலாய், தியாகமாய் ஜூலி இருந்தாள்.
நானும் அவளும்
இதே கரைகளில் அமர்ந்து கனவுகள் கண்டோம்.
எங்கள் தாய் நாட்டில்
நீதி சமத்துவமுள்ள அமைதியை
கனவு கண்டோம்.
காதலும் கலைகளும் உழைப்பும் செழிக்கும்
சுபீட்ச வாழ்வைக் கனவு கண்டோம்.
மீண்டும் காடுகள் படர்ந்துபடவும்
அரிப்பெடுக்காது மண் செழித்திடவும்
பாலி ஆற்றில் படிகம் போல
நீர் தெளிந்தோடவும்
எத்தனை கனவுகள்...எத்தனை கனவுகள்.

'கிருபா' உன்னை நேசிக்கின்றான்.
நீ ஏன் அவனை விலகிச் செல்கிறாய்
என்று கேட்டாள் இக்கரைகளில் ஒருநாள்.
கல்லும் கரையக் கரைப்பவள் ஜூலி.
மௌனமாய்க் கரைந்தேன்.

அடிக்கடி ஜூலி மறைந்து போவாள்
எங்கே போனாய் எப்போது வந்தாய்
என்று கேட்பதெம் வழக்கமில்லை.
அவளும் பேசாள்.

ஏதோ ஒரு முக்கிய பணி செய்கின்றாள்
என்பது அறிந்தேன்.
அவளது பாதுகாப்புப் பற்றியே
கவலை கொண்டிருந்தேன்.


எங்கள் வயலில் விதைப்பு நடந்தது.
காலை உணவுடன்
நானும் ஜூலியும் வயலுக்குச் சென்றோம்.
தூங்கப் போவதாய் அடம் பிடித்தவளை
வலிந்து நான்தான் அழைத்துச் சென்றேன்.
அத்திமரத்து நிழலில் வெறுமையாய்
உழவு வண்டியைக் கண்டதும்
நெஞ்சில் நெருடல்.
வயலில் உழவு எருதுகளின் பின்
அப்பா மாமா இப்படிச் சிலபேர்
கண்கள் பனித்தன.
மாமியை அங்கே காணவில்லை
கோவில் சென்றிருப்பாள்.

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அயலவர் சங்கதிகள்.



ஈழக்கலைஞர் எம்.பி.கோணேசின் இன்னொரு சாதனை!

"உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது..."

ஈழத்தில் முதன்முதலாக இசைத்தட்டில் ஒலித்த மெல்லிசைப் பாடலை கேட்டிராதவர்கள் உண்டா? இச் சாதனையைப் படைத்த பரமேஸ்-கோணேஸ் சகோதரர்களில் ஒருவரான எம்.பி.கோணேஸ் இப்போது மேற்கு ஜேர்மனியில் இன்னொரு சாதனையைப் படைத்திருக்கிறார். சர்வதேச சங்கீத முறையில் ஒரு சுரத்தட்டினை (Keyboard) எவரும் பயிலக்கூடிய முறையில் "சர்வதேச சங்கீத சுரத்தட்டு" என்ற பெயரில் புத்தகமொன்று எழுதியுள்ளார். இசைப் பிரியர்களுக்கும் இசையார்வம் உள்ளவர்களுக்கும் இப்புத்தகம் ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். இது தவிர இசைக்கருவிப் பயிற்சிக்கும் பரதநாட்டியம் கர்நாடக சங்கீதம் போன்ற கலைகளைப் பயிற்றுவிக்கவும் ஒரு பள்ளிக்கூடத்தையே மேற்கு ஜேர்மனியில் நடாத்துகிறார். கலைஞர் கோணசுக்கு எங்கள் பாராட்டுகள்.

இவருடனான தொடர்புக்கு:
M.P.Konesh
Schültzendlle 2,
4052 Korschenbroich 3

## மேற்கு ஜேர்மனி.

ஐரோப்பாவில் அதிகமான தமிழ்ச் சஞ்சிகைகளை வெளியிடும் நாடு எதுவென்று தெரியுமா?

மேற்கு ஜேர்மனிதான். இந்நாடுதான் இலங்கைத் தமிழர்களை அதிகமாகக் கொண்ட ஐரோப்பிய நாடு. எனவே இங்கிருந்து அதிகமான தமிழ்ச் சஞ்சிகைகள் வெளிவருவது ஒன்றும் ஆச்சரியமான விடயமில்லை. மேலும் பல்வேறுபட்ட அரசியல் போக்குகளைக் கொண்டவர்களாக வாழும் எம்மவர்கள் தத்தமது கருத்துகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் வெளிப்படுத்த (சஞ்சிகைகள் மூலமாக) முயல்வதன் காரணமாகவும் பல சஞ்சிகைள் பிறப்பெடுக்கின்றன. ஆனால் ஒரு ஆச்சரியப்படவேண்டிய விடயமென்வென்றால், "இலக்கியச் சந்திப்பு" என்ற ஒரு நிகழ்ச்சியை அமைத்து அதில் இங்கு வெளியாகும் அனைத்துச் சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுக்களும் ஒன்றுகூடி, இலக்கியம் அரசியல் போன்ற விடயங்களை கலந்துரையாடுவதுதான். எம்மவர்கள் ஒற்றுமையாக ஒன்றுகூடி ஒரு காரியத்தை நடாத்துவதென்பது நடக்கக்கூடிய காரியமா என்ன? ஆனால் நடாத்திக்காட்டுகிறார்கள் மேற்கு ஜேர்மனித் தமிழர்கள். எங்களின் "எக்கச்சக்கமான" பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்!

இடையிடையே இந்நிகழ்ச்சிகளில் "பேனை எறிதல்", "கொப்பி எறிதல்" போன்ற விளையட்டுக்களும் இடம் பெறுமாம். இதுமாதிரியான நல்ல முயற்சிகளில் இந்த மாதிரி விளையாட்டுக்கள் இடையிடையே இடம் பெற்றால்தான் "நாலுபேரின் கண்" பட்டுவிடாமல் இருக்கும் என்று நினைக்கிறார்களோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வீடு எனக்கோர் சிறை


தொடர்ந்தும் நகரத்துள் துவக்குகள்.
காயாத இரத்த வெடிலும்,
துயரங்களோடும் சனங்கள்.

நாய்கள் - நேர்ந்தவறி ஊளையிடும்
கொடிய மௌனத்தில்
தெருக்கள் இருண்டு கிடக்கும்.
வேலிக்குள்-
இரும்புத் தொப்பிகள்,
பாவனைக்குக் குண்டுகளோடு
இன்னும் சிலது.
அவர்கள் வருவார்கள்.

இப்படியே விடியும்.
இவன் காணுமல் போவான்
இன்னுமொருவன் இறந்துகிடப்பான்
இருப்பை இழப்பது எங்கள் தேசம்.

இப்படியே
நாளாந்த அவதானிப்புகளோடு
பழகிப்போன அறையில்
வீடு எனக்கோர் சிறை.

- மகா -
(கவிதையும் சித்திரமும் மகா)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான உணவுப் பொருட்களை மலிவான விலையில் நீங்கள் பெறவேண்டுமானால் எங்களிடம் வாருங்கள்.

# CEYLON MAT A.S

21, DRONNINGSGATA, 0152.OSLO.1. T.P:332619

உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் நோர்வேயின்

எப்பகுதிக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

20 RUE STE de la FOLIE MERICOURT THIYAGESWARAN
75011 - PARIS

20 RUE STE de la FOLIE MERICOURT ARUL
75011 - PARIS
FRANCE

# "வாழ்க்கையை இழந்து போனேன்

"தம்பி! நான் ஒரு சங்கீதக்காரனாக வரவேணுமெண்டதால சங்கீதத்தை முறையாகப் படிச்சவன். நான் பாடுறதும், என்ர பாட்டுகளை மற்றவையள் ரசிக்கிறதும், விமர்சிக்கிறதுந்தான் என்ர வாழ்க்கை. ஆனா இங்க (நோர்வேயில்) காசு, வேலை, பள்ளிக்கூடமெண்டு "ஓடிக்கொண்டேயிருக்கிற" எங்கட சனங்களோட நான் ஒரு கலைஞனாகவே வாழுறது முடியிற காரியமா?... அதால நானும் அவயளைப் போலவே வாழத் தொடங்கிட்டன். ஊரில ஒரு கலைஞனாகத்தான் சனங்களுக்கு என்னைத் தெரியும். அதால அங்க எனக்கு ஒரு கலைஞனுக்குரிய கௌரவம், மதிப்பு எல்லாமிருந்தது... எனக்கெண்டு ரசிகர்கள், எனக்கெண்டு விமர்சகர்கள்..., சங்கீதத்தை முறையாகப் படிச்சு அதைப்பற்றிப் பேசுற நண்பர்கள் எல்லாருமே அங்க இருந்திச்சினம். ஆனா இங்க... காலம எழும்பி படுக்கப்போறவரை கோப்பை கழுவி, நிலங் கழுவி...

எவ்வளவு இலட்சங்கள் உழைச்சாலும் என்னைப் பொறுத்தவரை நான் என்ர வாழ்க்கையை இங்க இழந்துபோனன்"

THIYAGESWARAN
20 RUE de la FOLIE MERICOURT
75011 - PARIS
FRANCE



ஜூன் 89

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்